# எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI

குரல் 04 அதிர்வு 46 ஏப்ரல் 2021 ethirolimelbourne@gmail.com தொ.பே:1800 960 162










ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கோ** கொவிட்’ பிரச்சினை ஒரு பக்கம் பீதியைக் கிளப்பிக் கொண்டிருக்க, கொவிட்டுக்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ள தடுப்பூசிகள் அதைவிடப் பெரிய பதற்றத்தை எல்லா நாடுகளிலும் கிளப்பியிருக்கின்றன.

‘கொவிட்’ தொற்றுக்கு தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டவுடன், உலகமே குதூகலித்தது. “வந்த பேயை ஓட்டிவிடலாம்” - என்று கைகுலுக்காமலே கொண்டாடியது. ஆனால், தடுப்பூசி வந்தவுடன் கிளம்பிய செய்திகள், ஒவ்வொரு நாட்டிலும் புதிய அச்சத்தை கிளப்பத்தொடங்கின. எல்லா நாடுகளிலுமிருந்து முறையிடப்பட்ட பொதுப்பிரச்சினை, தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களுக்கு, “குருதி உறைதல்” (blood clot) ஏற்படுவதாகக் கூறப்பட்டது.

ஏற்கனவே, இந்த தடுப்பூசியை போடலாமா, பார்த்து பார்த்து தின்று வளர்த்த இந்த உடம்புக்குள் முன் பின் தெரியாத ஊசியை உள்ளே அனுப்பலாமா என்ற சந்தேகத்தில் நடுங்கிக்கொண்டிருந்த பலருக்கு, இந்த “குருதி உறைதல்” மேலதிக பயத்துக்கு இறக்கை கட்டிவிட்டது.

அதுவும், அண்மையில் தமிழகத்தில் நடிகர் விவேக் அவர்கள், கோவிட் தடுப்பூசி போட்டு, இரண்டு நாட்களின் பிறகு, மாரடைப்பினால் மரணமானது, குறிப்பாக தமிழர்கள் மத்தியில், கோவிட் தடுப்பூசி குறித்த பாரதூரமான அச்சத்தை ஏற்படுத்திவிட்டது. இப்போது, கோவிட் தடுப்பூசி என்றாலே கிட்டத்தட்ட வெருண்டு ஓடும்வகையிலான பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

மிகப்பெரிய தொற்றுக்கள் எல்லாம் உலகில் முன்பு வந்து போயிருக்கின்றன. ஆனால், தற்போது சமூகவலைத்தள உலகில் இந்த கோவிட் தொற்று வந்திருப்பது, இந்த உலகுக்கே ஏற்பட்டிருக்கும் பெரும் சாபம் என்றுதான் சொல்லவேண்டும். ஏனெனில், இந்தப்பெரும் தொற்றுக் குறித்தும் தொற்றுக்கான காரணிகள் குறித்தும் அதற்கான தடுப்பூசிகள் குறித்தும் பொறுப்பான மருத்துவத் தரப்புக்கள் விளக்கங்கள் - வியாக்கியானங்கள் - கொடுப்பதற்கு முன்னரே, வட்ஸ் அப் மருத்துவர்களும் பேஸ்புக் அறிஞர்களும் தங்களது பிரச்சாரங்களை மக்கள் நம்பும்வகையில், அடித்துவிடத் தொடங்கிவிடுகிறார்கள். இந்த வலைத்தள இம்சைகள் குறித்து போதிய அறிவு மக்களுக்கு இருந்தும்கூட, அவர்கள் இந்த மருத்துவப் புரளிகளை நம்பி, ஏனையவர்களுக்கும் பரப்பும் காவிகளாகிவிடுகிறார்கள்.

இது இன்று மருத்துவ உலகம் சந்தித்திருக்கும் பெரும் சாபம். இதனை அனைவரும் பொறுப்புடன் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும்.

அதுபோன்றதொரு பெருஞ்சாபத்தில் - கடந்த ஒரு வருடத்தில் - முதலில் கோவிட் விழுந்தது. பிறகு, தடுப்பூசிகள் குறித்த புரளிகள் விழுந்து புரண்டது. தற்போது, “குருதி உறைதல்” பிரச்சினையும் விழுந்திருக்கிறது.

“குருதி உறைதல்” என்பது குறித்து பலர் பல விதமான விளக்கங்களை கொடுத்திருந்தாலும், அண்மையில் கனடாவிலிருந்து சுயாதீன பத்தி எழுத்தாளர் Julie Hambleton என்பவர் எழுதிய - மருத்துவ மேற்கோள்களுடன் குறிப்பிட்டுள்ள - கட்டுரை, தரமான விளக்கங்களை, சுருக்கமாக தருகிறது.

அந்தக் கட்டுரையின் பெரும்பாலான பகுதிகளைத் தழுவி எழுதப்படுகின்ற இக்கட்டுரை, பல வழிகளில், எதிரொலி வாசகர்களுக்கு பயனளிக்கும் என்று நம்புகிறோம்.

“குருதி உறைதல்” எனப்படுவது இந்தக் கோவிட் தடுப்பூசி பிரச்சினையில் மாத்திரமல்ல, பொதுவாகவே பாரதூரமான விஷயமாகவே சாதாரண மக்களால் விளங்கப்பட்டிருக்கிறது. இந்தத் தவறான விளக்கமும்கூட, கோவிட் தடுப்பூசி விஷயத்தில் மக்களுக்கு பெரும்பீதியை கிளப்பியிருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்.

மனித உடலில் இயற்கையாக இடம் பெற்றுக்கொண்டிருக்கின்ற எத்தனையோ வகையான மருத்துவ செயற்பாடுகளைப் போல, குருதி உறைதல் எனப்படுவதும் எல்லோரது உடம்பினுள்ளேயும் இடம்பெறுகின்ற சர்வ சாதாரணமான விடயம்.


இந்தக்குருதி உறைதல் என்பது உடலில் ஏற்படுகின்ற பல்வேறு வகையிலான மாற்றங்களைப்பொறுத்து, அந்தந்த இடங்களுக்கு அம்புலன்ஸ்போல சென்று, உடலை சமநிலைப்படுத்தி, பழைய நிலைக்கு கொண்டுவருகிறது.

உதாரணமாக, உடலில் ஒரு காயம் ஏற்பட்டால், அந்தக்காயத்திலிருந்து வெளியேறும் குருதியை கட்டுப்படுத்துவது. இந்தக்குருதி உறைதல் செயற்பாடுதான். இந்தச் செயற்பாடுமாத்திரம் இல்லாவிட்டால், சிறு காயம் எற்பட்டாலே, தண்ணீர் தொட்டியில் ஓட்டை விழுந்த மாதிரி, உடலில் உள்ள மொத்த இரத்தமும் அந்தக்காயத்தின் வழியாக வெளியேறியேறி, இரண்டொரு மணிநேரத்தில் வெறும் தோலும் எலும்பும்தான் எஞ்சும்.

இவ்வாறு காயங்கள் ஏற்படுகின்ற போது, அங்கு உறைகின்ற குருதி, காயம் ஆறிய பிறகு, தானாகவே குருதியோட்டத்தோடு கரைந்து கலந்துவிடுகிறது.

ஆனால், சில வேளைகளில், இவ்வாறு கரையாத உறைகுருதி உடலுக்குள் ஊர்வலம் போகத்தொடங்கிவிடுகிறது. திக்குத்தெரியாமல் நரம்புகள் - நாளங்கள் என்று அலைகின்ற இந்த உறைகுருதி உருண்டையினால்தான் உயிர்போகும் பிரச்சினைகள் உருவாகின்றன. ஏனெனில், இவ்வாறாக அலையும் உறைகுருதி உருண்டைகள், உடலை இயக்குகின்ற இதயம், மூளை, நுரையீரல் போன்ற அதிமுக்கியமான இடங்களுக்குச் சென்று, வேகமாக இரத்தச்சுற்றோட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் பாதையில் இடறுப்பட்டு, தடையை ஏற்படுத்துகின்றன. இதனால், இரத்தோட்டம் இல்லாத அவயவங்கள் சாகின்றன. அப்படியே மொத்த உடலும் இயக்கத்தை நிறுத்திவிடுகின்றன.

இதுதான் இந்த குருதி உறைதலில் இருக்கின்ற உயிர்போகும் பிரச்சினை.




ஆனால், இவ்வாறு குருதி உறைதல் உடலில் எங்காவது ஏற்பட்டுவிட்டால், அது ஓரளவுக்கு வெளியில் தெரிய ஆரம்பித்துவிடுகிறது. அன்றாட நடவடிக்கைகளில் பல மாற்றங்களை அறிகுறிகளாக காண்பிக்கத் தொடங்கிவிடுகிறது.

இந்தக் குருதி உறைதல் இரண்டு வகையில் ஏற்படுகின்றன.

ஒன்று - நாடிகளில் ஏற்படுகின்ற குருதி உறைதல். இவ்வாறு நாடிகளில் குருதி உறைதல் ஏற்பட்டுவிட்டால், உடனடியாக பல அறிகுறிகளை இது வெளியில் காண்பிக்கும். இவை உடனடியாக மருத்துவ ரீதியில் முறியடிக்கப்படாவிட்டால், வேகமாக உயிரை காவுகொண்டுவிடுகிறது.

இரண்டாவது - நாளங்களில் ஏற்படுகின்ற குருதி உறைதல். இது மிக மெதுவான அறிகுறிகளை காண்பித்து - அவை கவனிக்காமல் விடப்படுகின்ற பட்சத்தில் - ஒருநாள் திடீரென்று உயிரை கொய்துசென்றுவிடுகிறது.

இந்த குருதி உறைதல் பெரும்பாலும், கால்கள், தோள்கள், இதயம், நுரையீரல், மூளை, அடிவயிறு ஆகிய பகுதிகளில் ஏற்படுகின்றன.

இவற்றுக்குரிய அறிகுறிகள் வருமாறு -

**தோள்கள்**
- வீக்கம்
- மென்மையான பகுதிகளில் நோவு
- சூடான உணர்வு
- சிவப்பாக நிறமாறும் தோல்

**இதயம்**
- நெஞ்சு நோவும், நெஞ்சு பாரமாக உணர்தலும்
- லேசான தலைவலி
- மூச்செடுப்பதற்கு கடினமாக உணர்தல்

**அடிவயிறு**
- அடிவயிற்றில் நோவும் வீக்கமும்

**மூளை**
- திடீரென்ற ஏற்படுகின்ற தாங்கமுடியாத தலைவலி
- திடீரென்று பார்வையற்றுப்போதல் மற்றும் பேச முடியாது போதல்

**நுரையீரல்**
- திடீர் திடீரென்று மூச்செடுப்பதற்கு கடினமாதல்
- நெஞ்சுவலி
- திடீர் திடீரென்று இதயத்துடிப்பு அதிகமாதல்
- இருமும்போது இரத்தம் வெளியேறுதல்

**இவ்வாறான “குருதி உறைதல்” யார் யாருக்கெல்லாம் அதிகம் ஏற்படுகிறது என்று பார்த்தால் - நீண்ட காலம் வைத்திய சாலையிலிருந்தவர்கள். குறிப்பாக பாரிய சத்திரசிகிச்சைகளுக்கு உள்ளானவர்கள்.**

- 65 வயதுக்கு மேற்பட்டவர்கள்.
- அதிக நேரம் உட்கார்ந்தபடி பயணிப்பவர்கள் அல்லது பணிபுரிபவர்கள்.
- அதிக எடையானவர்கள்.
- கர்ப்பிணிகள்
- புகைப்பிடிப்பவர்கள்
- புற்றுநோயுள்ளவர்கள்
- கருத்தடை மாத்திரை உபயோகிப்பவர்கள்
- புகைப்பிடிப்பவர்கள்

ஆகியோர் முக்கியமானவர்களாக விழிக்கப்படுகிறார்கள்.

இந்த குருதி உறைதல் பிரச்சினை இப்போது, கோவிட் தடுப்பூசியுடன் ஏன் தொடர்பு படுத்தப்படுகிறது என்று கேட்டால், கோவிட்டுக்காக தற்போது வழங்கப்படுகின்ற தடுப்பூசிகளில் “அஸ்ட்ராஸெனிக்கா” - போட்டுக்கொண்டவர்களுக்கு இந்த குருதி உறைதல் பிரச்சினை ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், ஆராய்ச்சியாளர்களின் கருத்துப்படி, கருத்தடை மாத்திரை எடுப்பதனால் குருதி உறைதல் ஏற்படக்கூடிய வாய்ப்பினைவிட, கோவிட் தடுப்பூசி போடுவதனால் குருதி உறைதல் ஏற்படக்கூடிய வாய்ப்பு மிக மிகக்குறைவு என்கிறார்கள்.

அத்துடன், இன்னும் தெளிவாகச் சொல்லப்போனால், கோவிட்டினால் ஏற்படக்கூடிய ஆபத்தினைவிட, குருதி உறைதலினால் ஏற்படக்கூடிய ஆபத்து மிகக்குறைவு என்றும் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

மொத்தத்தில், கோவிட் தடுப்பூசி போட்டுக்கொள்வதனால் ஏற்படுகின்ற குருதி உறைதல் உட்பட பல பக்கவிளைவுகள் உறுதிப்படுத்தபட்ட அளவில் மிக மிக மிகக்குறைவு.

ஆகவே, தடுப்பூசிக்குப் பயந்து கோவிட்டை வாங்குவதா, கோவிட்டுக்கு பயந்து தடுப்பூசியை வாங்குவதா என்பதை புத்திபூர்வமாக சிந்தித்து - மருத்துவ ஆலோசனைகளை தீர விளங்கி - ஒவ்வொருவரும் பின்பற்றவேண்டும்.

உங்கள் உடல், வதந்திகளை விதைப்பதற்கு வாய்க்கப்பெற்ற வயல் அல்ல. அதனை சுகாதாரமாகப் பேணுவது எவ்வளவு முக்கியமோ அதுபோல சுத்தமான அறிவியலின் அடிப்படையில் பாதுகாப்பதும் முக்கியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:03 அதிர்வு: 46 ஏப்ரல் 2021 தொ.பே:1800 960 162

# ஒருபோதும் மன்னிக்காது வரலாறு என்ற வல்லூறு

ஓய்வுபெற்ற படைவீரர்களினதும் தற்போது படைகளில், பணிபுரிந்துகொண்டிருப்பவர்களிதும் தொடர் தற்கொலைகள் குறித்து கரிசனை கொண்டுள்ள ஆஸ்திரேலிய அரசு, இந்த மரணங்கள் தொடர்பில் அரச ஆணையம் (royal commission) அமைத்து விசாரணை செய்வதற்கு முடிவு செய்திருக்கிறது. இதற்குரிய உத்தியோகபூர்வ அறிவிப்பினை பிரதமர் ஸ்கொட் மொறிஸன் அண்மையில் வெளியிட்டிருந்தார்.

ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தின் கீழவையிலும் மேலவையிலும் இந்த அரச ஆணைய விசாரணைக்கு ஏகமானதான ஆதரவு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, எந்த எதிர்ப்புமின்றி, இந்த யோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டு, பிரதமரால் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆஸ்திரேலிய படையினர் அமெரிக்க – பிரித்தானிய படைகளுடன் இணைந்து பல்வேறு நாடுகளில் சென்று போர் செய்திருக்கின்றனர். தனியாகவும் சில நாடுகளில் சென்று அமைதிப்பணியில் ஈடுபட்டிருக்கின்றனர். ஆனால், அநேக தருணங் களில் நேச நாட்டுப்படைகளுடன் கைகோர்த்து சென்று படை நடவடிக்கைகளில் ஈடுபடுவது வழக்கம்.

இவ்வாறு, ஈராக், ஆப்கானிஸ்தான் நாடுகளில் போயிறங்கி, அங்கு படை நடவடிக்கைகளில் ஈடுபட்டதும், அவ்வப்போது சிலர் உயிரழந்து மாவீரர்களாக நாடு திரும்பியதும் அடிக்கடி செய்திகளில் பார்க்கும் சம்பவங்கள்.

படைகளிலிருந்தவர்கள் என்றால், அவர்களும் ஆயுதங்களில் ஒரு பகுதி என்று அநேகர் எண்ணுவதுண்டு. ஆனால், அவர்களும் மனிதர்கள், அவர்களுக்கும் இதயம் உண்டு என்ற யதார்த் தத்தை மிகச்சிலர்தான் நம்புகிறார்கள்.

இவ்வாறு படைகளிலுள்ளவர்களும் படை களிலிருந்து இளைப்பாறியவர்களும் மிகப்பெரிய உளச்சிக்கல் நோய்களால் பாதிக்கப்படுவதும், அந்த நோய் அவர்களை மாத்திரமன்றி ஏனையவர் களையும்கூட பாதிப்பதையும் பல உளச்சிகிச்சை யாளர்கள் உறுதி செய்திருக்கிறார்கள். இதனை அடிப்படையாகக்கொண்டு, பல திரைப்படங்கள்கூட வெளிவந்திருக்கின்றன.

தமிழில், "காற்றுவெளியிடை" – என்ற திரைப்படம் இந்தப்பிரச்சினையை பேச முற்பட்டிருக்கவேண்டும். ஆனால், அது வழமையான மாசாலாவாகப் போனது வேறு கதை.

ஆக, இந்தப்படை வீரர்களினது உளச்சிதைவும் அதன் நீட்சியாக அவர்கள் தங்கள் உயிர்களை தாங்களே மாய்த்துக்கொள்வதும், அவர்கள் சார்ந்த பிரச்சினை மாத்திரமல்ல, அவர்கள் சார்ந்த சமூ கத்தினது பிரச்சினை. அவர்களையும் அவர்களிட மிருந்து சமூகத்தையும் பாதுகாக்கவேண்டியது ஒரு அரசாங்கத்தின் பொறுப்பும் கடமையாகும்.

இந்தப்படை வீரர்களினது உளநலன் என்பது அவர்களது தனிப்பட்ட விடயம் என்பதற்கு அப்பால், அவர்களது உளச்சிதைவும் உட்குழப்பங்களும் வேறு வகையில் வெடித்தால், சிலவேளைகளில், அவர்கள் பொதுமக்களுக்கு எதிராகக்கூட திரும்பலாம். திரும்பினால், அதன் விளைவுகள் எப்படியிருக் கும் என்பதை நினைத்துக்கூட பார்க்கமுடியாது.

ஆக, ஆஸ்திரேலியாவில் கடந்த 20 வருடங்களில் சுமார் நானூறு படைவீரர்களது தற்கொலைகள் பதிவாகியுள்ளன. அதாவது, ஈராக்கின் மீதான படையெடுப்பில் ஆஸ்திரேலியாவும் தனது தலையை கொடுத்ததுமுதல், இற்றைவரைக்குமான காலப் பகுதியில், இந்தக்கொடுமையான விளைவு, ஆஸ்திரேலிய படையினருக்கு ஏற்பட்டுள்ளது.

கடந்த ஒரு வருடத்தில் இந்த விவகாரம் மேலும் பாரதூரமான நிலையை அடைந்துள்ளதாகவும், அடுத்தடுத்து பல படையினர் தற்கொலை செய்துள்ள தாகவும், அரசுத்தகவல்கள் கூறுகின்றன.

ஆக, படைகளில் பணிபுரிபவர்களதும் ஓய்வு பெற்றவர்களினதும் நலனை பாதுகாப்பதும் அவர்களது உள நிலைகளை சரியாகப்பேணுவதும் அத்தியா வசியமானது. தவறினால், இது மக்கள் மத்தியில் எந்நேரமும் குமுறத் தயாராக உள்ள எரிமலை களை கவனிக்காமலிருப்பது போலாகிவிடும்.

அந்த வகையில், அரச ஆணையம் அமைத்து இது தொடர்பில் விசாரிப்பதற்கு முடிவுசெய்திருக்கும் அரசாங்கத்தின் பொறுப்பான செயல் வரவேற்க வேண்டியது.

ஆனால், கடந்த 2009 ஆம் ஆண்டுமுதல் ஆஸ்திரேலியாவை நோக்கி பெருந்தொகையில் வந்திறங்கத்தொடங்கிய அகதிகள் தொடர்பில் ஆஸ் திரேலிய அரசுகள் கைக்கொண்ட கொள்கை களும் –

ஆஸ்திரேலிய அரசின் கொடூரமான இந்த அகதிக்கொள்கையினால் பலர் தடுப்புமுகாம் களில் தற்கொலை செய்துகொண்டதும் பலர் குடும்பங்களைப் பிரிந்து இன்றுவரை பல்வேறு உளப்பாதிப்புக்களோடு சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருப்பதும்கூட – மிகவும் உன்னிப்பாக கவனிக்கப்படவேண்டிய விடயம்.

ஆஸ்திரேலியாவின் பல மாநிலங்களில் நிர்வகிக்கப்பட்ட முகாம்கள் மாத்திமன்றி, ஆஸ்திரேலியாவுக்கு வெளியே மனுஸ் – நவுறு முகாம்களிலும் அகதிகளைக் கொண்டுசென்று சிறைவைப்பதற்கும், அவர்கள் அகதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரும்கூட இன்றுவரை நாட்டுக்குள் வருவதற்கு அனுமதி மறுப்பதற்கும், ஆஸ்திரேலிய அரசுக்கு தனது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றும் தீர்மானங்கள் போதுமானவையாக இருக்கின்றன. இது மக்கள் தீர்மானம் அல்ல. அரசாங்கம் தான் மேற்கொள்ளுகின்ற தான் தோன்றித்தனமாக முடிவுகள்.

இந்த முடிவுகள், எத்தனையோ போர்வடுக்க ளோடு இந்த நாட்டுக்கு தஞ்சம்கோரி வந்த குடும்பங்களின் சிறு அமைதியை மேலும் சிதைத் திருக்கின்றன. குழந்தைகளை குடும்பங்களிடமிருந்து பிரித்திருக்கின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக, வெளியிடமுடியாத வலிகளோடு பல உயிர்களை காவுகொண்டிருக்கின்றன.

"இந்த நாட்டுக்குள் சட்டவிரோதமாக வருகின்ற படகுகள் நிறுத்தப்பட்டாயிற்று" – என்று உறுதிமொழி வழங்கி ஆண்டுகள் கடந்த பின்னரும்கூட, இன்றுவரை நிரந்தர வதிவிட உரிமை வழங்கப்படாத அகதிகள் எத்தனையோ பேர் துயரங்களோடு சமூகத்தில் வசித்துவருகிறார்கள். குடும்பங்களை தங்களது நாடுகளில் வைத்துக்கொண்டு, தனியாக வாழுகின்ற பிரிவுக்கொடுமையில் துவழுகிறார்கள்.

ஆனால், அரசாங்கம் தொடர்ச்சியாக இந்த அகதிகள் பிரச்சினையை ஒரு கிரிமினல் சிக்கல்போல கடும் சட்டங்களால் அடக்கி ஒடுக்கிறது. அதற்கேற்ற அமைச்சர்களை பதவிகளில் நியமித்து பயம் காட்டுகிறது. அகதிகள் என்ற சொல்லுக்கு அரியண்டம் மிக்க அர்த்தத்தை நாடுமுழுவதிலும் பரப்புவதற்கு எத்தனிக்கிறது. நாட்டு மக்களும் தன்னைப்போலவே அகதிகளை பார்க்கவேண்டும் என்று விரும்புகிறது.

இவை அனைத்தும் மனித மாண்புகளுக்கு மாத்திரமல்ல, அடிப்படை மனிதாபிமானத்துக்கே முரணானவை. ஜனநாயக சிந்தனையோடு நாட்டைக் கைப்பிடித்து வளர்ச்சியின் பாதையில் கொண்டு போகிறோம் என்ற அறைகூவலுக்கு புறம் பானவை.

ஆக, கடந்த 2009 ஆம் ஆண்டுமுதல் படகு கள் மூலம் ஆஸ்திரேலியாவுக்கு வந்த அகதிகள் தொடர்பில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த லிபரல் – லேபர் இரண்டு கட்சிகளும் கடைப்பிடித்த கொள்கைகள் தொடர்பிலும் அகதிகளைக் கையாண்ட விதம் குறித்தும் ஏன் அரசு ஆணையம் அமைத்து விசாரணை செய்யக்கூடாது?

அரசின் வெளிநாட்டுக் கொள்கையை ஏற்று வெளிநாடுகளில் படையினராகச் சென்று பணிபுரிபவர்களின் உளநலன் எவ்வளவு முக்கியமோ, அது பற்றி விசாரிப்பதற்கு ஆணையம் அமைப்பது எவ்வளவு அவசியமோ – அதே ஆஸ்திரேலிய அரசின் அகதிக்கொள்கைகளினால் பாதிக்கப்பட்டு எத்தனையோ வகைகளில் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பாக கரிசனை கொள்ளவேண்டியதும் அந்தப் பாதிப்பை ஏற்படுத்தியவர்களின் கொள்கைகளை விசாரணை செய்வதும்கூட முக்கியம்தானே?

ஆஸ்திரேலிய அரசு புதிததாகக் கொண்டுவந்த எத்தனையோ அகதிக்கொள்கைகளுக்கு எதிராக எத்தனையோ வழக்குகள் நீதிமன்றத்தில் உள்ளன. எல்லாவற்றையும் தனது குயுக்தியான நகர்வுகளால் முறியடிப்பதும், சரிசெய்துகொண்டு இன்னொரு வழியினால் உள்ளே குதித்து, அகதிகளை நிந்திப்பதையும்தான் கடந்த பத்து வருடங்களாக ஆஸ்திரேலிய அரசு செய்துகொண்டிருக்கிறது.

எத்தனை வழக்குகளை வென்றாலும் எத்தனை குயுக்தித்தனங்களை காண்பித்துக்கொண்டாலும், தங்களது இருப்புக்காக பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்ச்சியாக நீதிமன்றத்துக்கு போய்க்கொண்டி ருக்கிறார்கள் என்பதே இந்த அரசாங்கத்தின் அகதிக் கொள்கையில் தொடர்ந்து ஏற்பட்டுக்கொண்டிருக்கும் தோல்வி இல்லையா? அந்த அகதிகளைக் கையாளும் விடயத்தில் அரசு தொடர்ச்சியாக காண்பிப்பதற்கு பெயர் கொடுமை இல்லையா?

இதற்கு எப்போது அரசு ஆணையம் நியமிக்கப்போகிறது இந்த அரசு?

நீதி கேட்கும் வாய்களை நட்ட ஈடு கொடுத்து அடைப்பதை எத்தனை வருடங்களுக்கு தொடரப்போகிறது? பலநூற்றுக்கணக்கான வருடங்களாக பூர்வகுடி மக்களுக்கு இழைத்த கொடுமைகளுக்கே 2007 ஆம் ஆண்டுதான் முன்னாள் பிரதமர் கெவின் ரட் நாடாளுமன்றத்தில் மன்னிப்பு கேட்டார்.

அதுபோல, அகதிகளைக் கையாளும் விடயத்தில் ஆஸ்திரேலிய அரச தொடர்ச்சியாக இழைத்துவரும் கொடுமைகளுக்கும் அது ஏற்படுத்தும் வலிகளுக்கும் உயிரழப்புக்களும் எப்போது விசாரணை? எப்போது நீதி? எப்போது மன்னிப்பு?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sai Shree Foods Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI





# கொழும்பின் நடுவில் சீனாவுக்கு "தனிநாடு"

# அணில் ஏறவிட்ட கூட்டுக் கட்சிகள் கூப்பாடு!

நாட்டுக்கு எதிராக அரங்கேறிய துரோகங்களுக்கு துணை நின்றதாலும், தேசிய பொருளாதாரத்தை சிதைத்து, நாட்டை கடன் பொறிக்குள் சிக்கவைக்கும் வழியில் பயணித்ததாலுமே நல்லாட்சி அரசுக்கு சமாதிகட்டி, நாட்டையும், மக்களையும் பாதுகாக்க ராஜபக்ச அரசை ஆட்சிபீடத்தில் அமர்த்தினோம். ஆனால், அந்த அரசும் கொள்கை மறந்து - திசைமாறி பயணித்துக்கொண்டிருக்கின்றது."

இவ்வாறு உள்ளக் குமுறல்களை வெளிப்படையாகவே வெளிப்படுத்தி ஒப்பாரி வைத்து வருகின்றனர் ஜனாதிபதித் தேர்தலின்போது கோட்டாபய ராஜபக்சவுக்கு பேராதரவை வழங்கிய சிங்கள தேசியவாத அமைப்புகளின் பிரதிநிதிகள்.

மறுபுறத்தில், அரசின் திட்டங்களையும், முன்மொழிவுகளையும் பங்காளிக்கட்சிகள் கடுமையாக எதிர்ப்பதால் ஆளும் அரசுக் கூட்டுக்குள் கடும் முறுகல் - விரிசல் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, அரச கூட்டணியின் பிரதான பங்காளியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை நம்பும் நிலையில், ஏனைய பங்காளிகள் இல்லை என்பதால் எந்நேரத்திலும் வேண்டுமானாலும் கூட்டணியின் ஆயுள் முடிவுக்கு வரக்கூடும். இதற்கிடையில் அரச முகாமை தகர்ப்பதற்காக எதிரணி தொடுக்கும் பீரங்கித்தாக்குதல்வேறு.

இவ்வாறு, திரும்பும் திசையெல்லாம் நெருக்கடிகளும், பிரச்சினைகளும், சவால்களும் மொட்டு அரசை துரத்துவதால், மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் கைவசம் இருந்தும் திண்டாடிக்கொண்டிருக்கின்றது. 50 ஓவர்கள் கிரிக்கெட் போட்டியில் முதல் 10 ஓவர்களுக்குள்ளேயே முக்கிய விக்கெட்டுகளை பறிகொடுத்துவிட்டு அணியொன்று திணறுவதுபோல்தான் கோட்டா அரசின் நிலை காணப்படுகின்றது.

இன்னும் ஈராண்டுகள்கூட முடிவடையவில்லை, அதற்குள் ஈராயிரம் சிக்கல்கள். கொழும்பு துறைமுகம் தொடர்பான புதிய சட்டமூலம், மாகாண சபை முறைமை தொடர்பான சட்டமூலம் ஆகியவற்றால் பயங்கர சிக்கல்கள் வலுத்துள்ளன. கொழும்பு துறைமுகம் விகாரம் நீதிமன்றம்வரை சென்றுவிட்டது.

### கூட்டணிக்குள் குழப்பத்துக்கு பிள்ளையார்சுழி போட்ட '20'

பரப்புரை மேடைகளில் ஒன்றாக சங்கமித்து, ஒருமித்த குரலில் பிரச்சாரப் போரை முன்னெடுத்ததால், ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தல்களின்போது மொட்டு தலைமையிலான கூட்டணிக்கு வரலாற்று வெற்றிகள் கிடைத்தன.

பொதுத்தேர்தலின்போது உதயகம்மன்பில, விமல் வீரவன்ஸ ஆகியோர் இணைந்து உறுதிமொழிகள் அடங்கிய அறிக்கையொன்றை தனியாக வெளியிட்டமையே, கூட்டணிக்குள் முறுகல் ஏற்படுவதற்கு முதல் காரணம் என்று கூறலாம். தேர்தல் காலம் என்பதால் அது பெரிதுப்படுத்தப்படவில்லை.

19 ஆவது திருத்தச்சட்டத்தின் ஊடாக பிறந்த 'ஜனநாயகம்' என்ற குழந்தைக்கு சட்டரீதியாக சமாதிகட்டும் நோக்கில் முன்வைக்கப்பட்ட 20 ஆவது திருத்தச் சட்டமே அரசுக்குள் ஏற்பட்டிருந்த உட்கட்சி மோதலை - தேர்தலுக்குப் பிறகு - வெளிச்சத்துக்குக் கொண்டுவந்தது.

இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் நாடாளுமன்றம் வருவதற்கு இருந்த தடையை நீக்குவதற்கும், ஜனாதிபதி பதவியை வகிப்பவர் எத்தனை தடவைகள் வேண்டுமானாலும் தேர்தலில் போட்டியிடலாம் என்பதற்கு வழிவகுக்கும் வகையிலும் இருந்த சரத்துகளுக்கும் எதிராக அரச பங்காளிக்கட்சிகள் போர்க்கொடி தூக்கின. இதனால், பங்காளிகளுக்கும், மொட்டு அணிக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டது. இறுதியில் இவ்விரு சரத்துகளையும் மொட்டு கட்சி மீளப்பெற்றது. இதனால், பஸில் ராஜபக்ச நாடாளுமன்றம் வருவதற்கு இருந்த வாய்ப்பு தடுத்து நிறுத்தப்பட்டது.

அதன்பின்னர், அவ்வப்போது சிறு மோதல்கள் இடம்பெற்றாலும் கூட்டணி ஜனநாயகம் என்ற போர்வையில் சர்ச்சை சமாளிக்கப்பட்டது.

### மொட்டு அணிக்கு எதிராக '11 கட்சிகளின் கூட்டணி' உயதம்

இந்நிலையில், தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ வெளியிட்ட கருத்தொன்று, கூட்டு அரசுக்குள் புயலாகக் கிளம்பியது.

"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமைப்பதவியில் இருந்து மஹிந்த ராஜபக்சவை நீக்கிவிட்டு, அந்த இடத்துக்கு கோட்டாபய ராஜபக்சவை நியமிக்க வேண்டும்." - என்பதே விமல் வெளியிட்ட கருத்தின் சுருக்கம்.

ஏற்கனவே விமல்மீது சீற்றத்தில் இருந்த மொட்டு கட்சி உறுப்பினர்கள், இதனை வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டு, விமல் மீதும் அவரின் கட்சிமீதும் சரமாரியாக விமர்சனக்கணைகளைத் தொடுத்தனர். வெளியிட்டு அறிக்கைக்கு மன்னிப்பு கோராவிட்டால், விமலிடமிருந்து அமைச்சுப்பதவியை பறிக்கவேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தினர்.

மோதல் உச்சத்தைத் தொட - சண்டை சந்திக்குவர, - அரசுக்கு ஆதரவு வழங்கும் பல பங்காளிக்கட்சிகள் விமல் பக்கம் நின்றனர். சிறிலங்கா சுதந்திரக்கட்சி, பிவிதுரு ஹெல உறுமய, ஜனநாயக இடதுசாரி முன்னணி, கம்யூனிஸ்கட்சி கட்சி ஆகியன விமலுக்காகக் குரல் கொடுத்தன. மொட்டு கட்சி இல்லாமல் சந்திப்புகள் நடந்தன. சிறுகட்சிகள் ஒன்று சேர்ந்ததால் மன்னிப்பு கோராமல் நழுவினார் விமல். இதற்காக ஒன்றிணைந்த கட்சிகளே தற்போது 11 கட்சிகளாக மொட்டுகட்சியின்றி தொடர் சந்திப்புகளை நடத்திவருகின்றன.

இந்த கட்சிகளின் தலைமையில், தற்போது, கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்குவது தொடர்பில் எடுக்கப்பட்ட முடிவின்போதும் அரச கூட்டுக்குள் பெரும் குழப்பம் ஏற்பட்டது.

### மக்கள் மற்றும் சிவில் அமைப்புகள் அதிருப்தி

மொட்டு கட்சிக்கும், பங்காளிகளுக்குமிடையில் இவ்வாறு அரசியல் ரீதியில் முறுகல்கள் இவ்வாறு ஒருபுறமிருக்க, அரச கூட்டணியின் செயற்பாடுகள் தொடர்பில் மக்கள் கடும் அதிருப்தியடைந்துள்ளனர். ஏதேனும் ஒரு விடயம் சம்பந்தமாக வெளியிடப்படும் வர்த்தமானி பல தடவைகள் மாற்றப்படுகின்றன. இதன்மூலம் அரசுக்கு தெளிவான கொள்கை இல்லை என்பது புலனாகின்றது என மக்கள் விசனம் வெளியிடுகின்றனர்.

விருப்பு வாக்குமுறை அவசியமில்லை என மக்கள் தொடர்ச்சியாக வலியுறுத்திவந்தனர். அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படும் எனக் கூறப்பட்டாலும் அது தொடர்பிலும் அரச கூட்டுக்குள் இதுவரை மோதல் நிலையே தொடர்கிறது. மாகாண சபைகளுக்கான தேர்தலை 70 இற்கு 30 என்ற அடிப்படையில் நடத்துவதற்கான யோசனையை மொட்டு கட்சி முன்வைத்துள்ளது. (அதாவது 70 வீதம் தொகுதி வாரியாகவும், 30 வீதம் விகிதாசார அடிப்படையிலும்)

அத்துடன், ஒரு தொகுதியில் ஒரு கட்சி மூன்று வேட்பாளர்களை நிறுத்தலாம் என்ற முன்மொழிவும் உள்ளது. இந்த யோசனைக்கு அரச பங்காளிகள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

இவையெல்லாவற்றையும் - தேர்தல் மறுசீரமைப்பு தொடர்பில் - ஆராய்வதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. எனவே, என்ன நடக்கின்றது என மக்கள் குழம்பிப்போய் உள்ளனர்.

அதேபோல, நாட்டில் பல பிரச்சினைகளுக்கு தீர்வுகாணவேண்டியுள்ள நிலையில் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையில் அரசு இறங்கியுள்ளது என்ற குற்றச்சாட்டை சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளும், எதிரணி அரசியல்வாதிகளும் முன்வைத்துள்ளனர். அதற்கான காரணங்களையும் ஊடகவியலாளர் மாநாடுகளில் பட்டியலிட்டுக் காட்டிவருகின்றனர்.

தேசிய வளங்கள் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்படாது, மோசடிகள் இடம்பெறா கடன்களுக்கு பதிலாக முதலீடுகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும், நடுநிலையான வெளிவிவகாரக் கொள்கை பின்பற்றப்படும் என்றெல்லாம் உறுதிமொழிகள் வழங்கப்பட்டிருந்தாலும் சகல உறுதிமொழிகளும் அப்பட்டமாக மீறப்பட்டுவருகின்றன. சீன சார்பு கொள்கையும், துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலமும் இதற்கு சிறந்த சான்றாகும் என அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

### தேசத்துக்காக மார்தட்டலும் தேசிய வளங்களை விற்றலும்

தேசியவாதத்தை முன்னிலைப்படுத்தி, 'நாட்டின் ஒரு அங்குலமேனும் வெளிநாட்டுக்கு வழங்கப்படாது' என மார்தட்டி வாக்குவேட்டை நடத்திய இந்த அரசின், புதிய திட்டமொன்றானது அரசுக்குள்ளேயே எதிர்ப்பலைகளை உருவாக்கியுள்ளது. இந்தப்புதிய திட்டத்துக்கு எதிராக முதல் நபராக ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாச ராஜபக்ச போர்க்கொடி தூக்கியுள்ளார்.

அது என்ன திட்டம்? இது தொடர்பில் முக்கியமான சில தகவல்களை ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க அண்மையில் அம்பலப்படுத்தினார்.


"கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு' எனும் பெயரில் அரசு சட்டமூலமொன்றை சமர்ப்பித்துள்ளது. குறித்த துறைமுக நகரத்தில் ஆயிரத்து 115 ஏக்கர் நிலப்பரப்பில் 80 வீதம் சைனா ஹாபர் கம்பெனிக்கு உரிமையானதாகும். இக்கம்பனி கடந்த காலத்தில் ராஜபக்சக்களின் தேர்தல்களுக்காகவும் நிதியங்களுக்காகவும் பாரியளவில் பணத்தை வழங்கியது என்ற தகவலும் உள்ளது.

(09ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI





# கொழும்பின் நடுவில் சீனாவுக்கு "தனிநாடு"

# அணில் ஏறவிட்ட கூட்டுக் கட்சிகள் கூப்பாடு!

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

"நாட்டின் பொதுச்சட்டத்திற்கு கட்டுப்படாத ஒரு வலயமாக பெயர் குறிக்குமாறு இக்கம்பெனியிடமிருந்து அரசுக்கு தொடர்ச்சியாக அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. அதன் விளைவாகவே இந்தப்புதிய சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

"முதலீட்டுச்சபை சட்டம், மூலோபாய அபிவிருத்திச் சட்டம் என இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட இரண்டு சட்டங்கள் உள்ளன. அந்த சட்டங்கள் மூலமாக பாரியளவில் வரிச்சலுகைகளை வழங்க முடியும். ராஜபக்சக்கள் ஷெங்கிரில்லா ஹோட்டலுக்கு 25 வருட வரிச் சலுகைகளைக் கொடுத்ததும், ரணில் அம்பாந்தோட்டை துறைமுகத்தை விற்பனை செய்கையில் சீனக் கம்பெனிக்கு வரிச்சலுகைகளை வழங்கியதும் இந்த சட்டத்தின் கீழாகும்.

"இவ்வாறு சட்டங்கள் இருக்கையில், அவற்றை அமுலாக்காமல் துறைமுக நகரத்துடன் ஏற்புடைய ஆணைக்குழுவொன்றின்கீழ் தனி மாநிலமொன்றுக்கு ஏற்புடைய பெருந்தொகையான சிறப்புரிமைகள் வழங்கப்பட்டுள்ளன" - என்று அநுரகுமார குறிப்பிட்டார்.

இத்திட்டத்தால், ஏற்படும் பாதிப்புகளையும், இதர விடயங்களையும்கூட அநுகுமார திஸாநாயக்க பட்டியலிட்டுக் காட்டியுள்ளார். அரசியல் களத்தில் உரிய ஆய்வு - தகவல் இன்றி எந்தவொரு தகவலையும் ஜே.வி.பி. பகிரங்கப்படுத்துவதில்லை என்பதே பொதுக்கருத்து. இந்த விடயத்தையும் நினைவூட்டிவிட்டு, அநுர வழங்கிய மேலதிக தகவல்களையும் தருகின்றோம்.

## இலங்கையில் மலரும் சீன மாநிலம்?

"மேற்படி சட்டமூலம் நிறைவேறினால் துறைமுக நகரம், எந்தவோர் உள்ளூராட்சி நிறுவன ஆளுகைக்கும் கட்டுப்படாத விசேட வலயமாக இயங்கும்.

"உள்ளூராட்சி நிறுவன ஆளுகைப் பிரதேசமானது, அங்கு வசிக்கின்ற மக்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மூலமாகவே நிர்வகிக்கப்படுகின்றது. எனினும், துறைமுக நகரமானது ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்ற ஆணைக்குழுவொன்று மூலமாகவே நிர்வகிக்கப்படும்.

"ஆணைக்குழுவிற்கு விசேட நிதிசார் அதிகாரங்கள் கிடைக்கின்றன. ஆணைக்குழுவுக்கென தனியாக - வேறான - நிதியமொன்று உள்ளது. அரச வருமானம் ஒன்று சேர்வது திறைசேரிக்கே ஆகும். அதிலிருந்து பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் அவசியமானதாகும். ஆனால், இந்த துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு அதற்குப் புறம்பாக - நாடாளுமன்ற அங்கீகாரம் அவசியப்படாத - தனிவேறான - நிதியமொன்றை பேணிவர இயலும்.

"துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு பல்வேறு வரிச்சலுகைகளை வழங்குகின்ற அதிகாரம் கொண்டதாகும். பொதுவாக நாடாளுமன்றத்தினால் மாத்திரமே வரிச்சலுகை வழங்கமுடியும். ஆனால், இந்த 'மாநிலத்திற்கு' விசேட வரிச்சலுகை அதிகாரம் உரித்தானது.

"அரசிற்கு கிடைக்கின்ற பணம், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மேற்பார்வைக்கு கட்டுப்படுகின்றது. ஆனால், தனியார் நிறுவனமொன்று மூலமாகவே துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் பணம் கணக்காய்வு செய்யப்படுகின்றது. அது அரச கணக்காய்விலிருந்து அகற்றப்பட்டுள்ளது.

"அரச நிறுவனங்களை தேவையேற்படின், நாடாளுமன்றத்தின் 'கோபா' மற்றும் 'கோப்' முன்னிலையில் வருமாறு அழைக்கலாம். ஆனால், இந்த 'சீன மாநில' நிர்வாகத்தை நாடாளுமன்றத்தின் முன்னிலையில் தோற்றுமாறு அழைக்க இயலாது.

"இந்த துறைமுக நகரத்தில் வெளிநாட்டவர்களாலேயே முதலீடுசெய்ய இயலும். அது இலங்கையின் தொழில் முயற்சியாளர்கள் முதலீடுசெய்வதை மறைமுகமாக தடுக்கிறது. அந்த நிதியங்களை வெளிநாட்டவர்களிடமிருந்து பெற்றுக்கொள்பவரால் மாத்திரமே, இங்கு முதலீடுசெய்ய இயலும். இவ்வாறெல்லாம், அறிவித்திருப்பதன் மூலம் - அதன் அர்த்தம் - இது தனிவேறான மாநிலமாக அமைவதாகும்.

"துறைமுக நகர வலயத்தில் சேவையாற்றுபவர்களுக்கு சம்பளம் செலுத்துவதாயின், அது பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டுப் பண அலகு மூலமாகவே என குறிப்பிடப்படுகின்றது. அது சீன 'யுவான்' ஆக முடியும்.

"இங்கு சேவையாற்றுபவர்களின் வருமானம், வருமான வரியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது. அந்தப் பணத்தை இந்நாட்டின் வெளிநாட்டு புழக்க கணக்கொன்றில் வைப்புச்செய்ய இயலுமென பிரகடனஞ் செய்யப்படுகின்றது.

"இலங்கை பிரஜைகள் கொழும்பு துறைமுக நகரத்தின் சேவைகளை பணம்செலுத்தி பெற்றுக்கொள்ள முடிகின்றபோதிலும் அதிலிருந்து வெளியில் செல்லும்போது கொள்வனவுசெய்த பண்டங்களுக்கு வரி செலுத்தவேண்டும். இதன்மூலமாக, இந்த வலயம் தனியான ஒரு நாடாக அமைகின்றதென்பது நிரூபணமாகின்றது.

"துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு ஆளுகைப் பிரதேசத்தில் சர்வதேசத் தீர்ப்பு மூலமாகவே தீர்த்துக்கொள்ளப்பட வேண்டும்.

"நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள மிகவும் முக்கியமன பல சட்டங்கள் இந்த மாநிலத்தில் அமுலில் இருக்க மாட்டாது.

"ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்ற ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் இலங்கைப் பிரசைகளாக மாத்திரமே அமையவேண்டுமென எந்தவோர் இடத்திலும் குறிப்பிடப்படுவதில்லை. எனவே ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் சீனர்களா எனும் சந்தேகம் எழுகின்றது." - என்றார் அநுர.

மேற்படி சட்டமூலத்தை, ஜனாதிபதி தேர்தலின்போது கோட்டாபய ராஜபக்சவுக்கு ஆதரவு வழங்கிய - அபயராம விகாரையின் விகாராதிபதி கலாநிதி முறுத்தெட்டுவே ஆனந்த - தேரர் கடுமையாக எதிர்த்துள்ளார். உயர்நீதிமன்றத்திலும் அதனை சட்டரீதியாக சவாலுக்குட்படுத்தியுள்ளார். மேலும், சில சிவில் அமைப்புகளும் வழக்கு தொடுத்துள்ளன. உயர்நீதிமன்ற தீர்ப்புவரும்வரையே பங்காளிகள் காத்திருக்கின்றன.

அதேவேளை, "அரசால் முன்னெடுக்கப்படும் சில திட்டங்களுக்கு எதிர்ப்புகள் வலுப்பதால், தீவிரமாக செயற்படுவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச ஹிட்லர்போல் செயற்படவேண்டும்" - என இராஜங்க அமைச்சர் திலும் அனுமுகன கருத்து வெளியிட்டுள்ளார். அதாவது, எந்த் தடைகள் வந்தாலும் கண்டுகொள்ளகூடாது, பங்காளிகளின் நெருக்கடிகளை கவனத்திக் எடுக்காது செயற்படவேண்டும் என்பதே அவரின் கருத்தின் உள்நோக்கமாகும்.

முழு உலகமும் ஹிட்லரின் ஆட்சியை வெறுக்கும் நிலையில், இலங்கையில் மட்டுமே அதற்கு சார்பாக - அதுவும் ஆளுந்தரப்பில் இருந்து - கருத்துகள் முன்வைக்கப்பட்டுவருகின்றன. மக்கள் ஆட்சிக்கு பதிலாக காட்டாட்சியை முன்னெடுக்கவேண்டும் என்பதே இக்கருத்துகளின் உள்நோக்கம் என்பது கசப்பான உண்மையாகும்.

## ஆணைக்குழு அரசியல்

இதற்கிடையில் இந்த அரசின் சில செயற்பாடுகள் அரசுக்கு சார்பான சில புத்திஜீவிகளைக்கூட கவலையடைய வைத்துள்ளன.

2015 ஜனவரி 8 முதல் 2019 நவம்பர் வரை இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவால் ஆணைக்குழுவொன்று அமைக்கப்பட்டது. அந்த குழுவின் அறிக்கையும் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையிலுள்ள பரிந்துரைகளை அமுல்ப்படுத்துவதற்கான யோசனையையும் அரசு நாடாளுமன்றத்தில் முன்வைத்துள்ளது. இந்த ஆணைக்குழு அறிக்கைக்கு எதிராக ஜே.வி.பி. நாடாளுமன்றம் சென்றுள்ளது. இதர கட்சிகளும் சட்டநடவடிக்கைக்கு தயாராகின்றன. ஏனெனில், சில அரசியல் தலைவர்களின் குடியுரிமையை பறிப்பதற்கான பரிந்துரைகூட இந்த அறிக்கையில், முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆக, இந்த ஜனாதிபதி ஆணைக்குழு சுயாதீனமான முறையில் பரிந்துரைகளை முன்வைத்துள்ளதா என்ற சந்தேகம் எழுகின்றது. ஏனெனில், நீதிமன்ற அதிகாரத்துக்கு - தீர்ப்புக்கு - சவால் விடும் வகையிலான பரிந்துரைகள்கூட இந்த அறிக்கையில் உள்ளன. அரசுக்கு சார்பானவர்களின் வழக்குகளை மீளப் பெறவேண்டும் என்ற பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது என எதிரணி உறுப்பினர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

"அரசுடன் தொடர்புடையவர்களினதும் அன்பர்களினதும் எழுபதுக்கும் மேற்பட்ட வழக்குகளை அகற்றிக்கொள்வதற்கான விதப்புரை நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

"ஊழல்கள், திருட்டுகள் மற்றும் குற்றச்செயல்கள் சம்பந்தமான வழக்குகளை வாபஸ்பெற்றுக்கொள்ளவே முயற்சி எடுக்கப்படுகின்றது. 'அவன்ற்காட்' வழக்கு, பிள்ளைகளைக் கடத்திச்சென்று கொலைசெய்தமை பற்றிய வழக்கு, லசந்த வீரதுங்கவின் படுகொலையுடன் தொடர்புடைய வழக்கு, கீத் நொயாரைத் தாக்கியமையுடன் தொடர்புடைய வழக்கு ஆகியவற்றின் குற்றவாளிகளை விடுதலைசெய்ய இதன்மூலமாக பிரேரிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல, வழக்குகளை விசாரித்த அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது" - எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

ஆக, தனது செயலாலேயே தான் யாரென்பதை அரசும், அதன் உறுப்பினர்களும் நிரூபித்துள்ளனர். தான் ஆட்சிக்கு வந்தால் அதை செய்வேன், இதை செய்வேன் என சூளுரைத்த ஜனாதிபதியும், உரிய வகையில் செயற்படுகின்றாரா என்ற வினா எழுகின்றது.

ஒரு புறத்தில் உட்கட்சி மோதல், மறுபுறத்தில் கொரோனாவால் ஏற்பட்ட நெருக்கடிகள், கடன் சுமை அதிகரிப்பு, பொருளாதார நெருக்கடி, சர்வதேச அழுத்தம் ஆகியவற்றால் அரசுக்கு தற்போது இடியப்ப சிக்கல் ஏற்பட்டுள்ளது. மக்களும் அதே-நிலையில்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஸ்திரேலியாவின் கோவிட்-19 தடுப்பூசித் திட்டம்

# ஆஸ்திரேலியாவின் COVID-19 தடுப்பூசித் திட்டம் தொடங்கிவிட்டது.

COVID-19 தடுப்பூசிகள் ஆஸ்திரேலியாவை பாதுகாப்பாக வைத்திருக்கும் என்பதுடன் நமது வாழ்க்கை முறையையும் பாதுகாக்கும். பின்வரும் பிரிவினர் உட்பட எமது சமூகத்தில் கடுமையான நோயால் பாதிக்கப்படும் ஆபத்தில் உள்ளவர்களுக்கும், எளிதில் வைரஸ் தொற்றுக்கு உள்ளாகக்கூடியவர்களுக்கும் முதலில் தடுப்பூசி போடப்படும்:

- **தனிமைப்படுத்தல் பணி மற்றும் எல்லைப் பாதுகாப்பு பணியாளர்கள்**
- **முன்னிலை சுகாதார பராமரிப்பு, ஊனமுற்றோர் பராமரிப்பு மற்றும் முதியோர் பராமரிப்பு பணியாளர்கள்**
- **முதியோர் மற்றும் ஊனமுற்றோர் பராமரிப்பு மையங்களில் வாழ்பவர்கள்**



COVID-19-இலிருந்து சிறந்த பாதுகாப்பை தடுப்பூசி வழங்குகிறது என்றபோதிலும் நாம் அனைவரும் தொடர்ந்தும் கோவிட்டிலிருந்து நம்மைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வது முக்கியம்.

தடுப்பூசி உங்களுக்கு எப்போது கிடைக்கும் என்பதை அறிந்துகொள்ள **australia.gov.au** -க்குச் செல்லுங்கள். அல்லது National coronavirus and COVID-19 vaccine helpline -ஐ **1800 020 080** என்ற இலக்கத்தில் அழைக்கலாம். மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்த்துரைப்பு சேவைகளுக்கு **131 450**–ஐ அழையுங்கள்.

**BE COVIDSAFE**

**COVID-19 VACCINATION**

**பாதுகாப்பானது. செயல்திறன்மிக்கது. இலவசமானது.**

**Australian Government**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI






● அ.முத்துக்கிருஷ்ணன்

தமிழகத்தில் சட்டமன்ற தேர்தலுக்கான வாக்கு பதிவு ஏப்ரல் 6, 2021 அன்று நடந்து முடிந்தது. ஏப்ரல் 6 ஆம் திகதி தேர்தல் நடைபெற்ற போதிலும் ஆறு மாதங்கள் முன்பே தேர்தல் களம் சூடுபிடித்துவிட்டது. ஒருபுறம் ஜெயலலிதாவின் மர்மமான மரணத்திற்கு பிறகு அதிமுக என்கிற கட்சி எப்படி இந்த தேர்தலை எதிர்கொள்ளும் என்கிற கேள்வி மக்கள் மனங்களில் இருந்தது, மறுபுறம் கலைஞரின் மரணத்திற்கு பிறகு திமுகவினர் சந்திக்கும் இரண்டாம் தேர்தலாக இது அமைந்தது.

ஜெயலலிதாவின் மரணத்திற்கு பிறகு அதிமுக என்கிற கட்சி சசிகலாவின் உடும்புப்பிடியில் கச்சிதமாகவே இருந்தது, ஆனால், மளமளவெனக காட்சிகள் மாறின. ஜெயலலிதா உயிரோடிருந்தால் வெளிவந்திருக்க வாய்ப்பே இல்லாத சொத்து குவிப்பு வழக்கின் தீர்ப்பு துரித வேகத்தில் வெளிவந்தது, வழக்கின் முதல் குற்றவாளியான ஜெயலலிதா இறந்து போனார், உயிரோடு இருக்கும் இரண்டாவது குற்றவாளி சசிகலா அதிரடியாக கைது செய்யப்பட்டு பெங்களூரு - பார்ப்பன அக்கிரகாரா - சிறையில் அடைக்கப்பட்டார். அதிமுக கட்சியை ரிமோட் கண்ட்ரோலின் மூலம் டெல்லியில் இருந்து இயக்கத் தொடங்கினார்கள். அதிமுகவிற்குள்ளான அதிகார சண்டையை பார்த்து கொஞ்சக்காலம் சந்தி சிரித்தது, ஓபிஎஸ் கோஷ்டியுடன் துணை முதல்வர், பதவி மற்றும் சில அமைச்சர் பதவிகள் பகிரப்பட்டதும் தர்ம யுத்தம் முடிவுக்கு வந்தது.

தமிழக தேர்தல்கள் எப்பொழுதுமே திமுக - அதிமுக என்கிற இரு பெரும் கட்சிகள் மத்தியிலான போட்டியாகவே கடந்த பல பத்தாண்டுகளாக இருந்து வந்துள்ளது. 2016 தேர்தலில் "மக்கள் நல கூட்டணி" என்கிற பெயரில் உருவான இடதுசாரிகள், விடுதலை சிறுத்தைகள், தேமுதிக கூட்டணி மூன்றாம் அணியாக தம்மை முன்னிறுத்தியது. மூன்றாவது அணி பிரித்த வாக்குகளின் துணையுடன் அதிமுக - சுலபமாக - பெரும்பான்மை பலத்துடன் - ஆட்சியைக் கைப்பற்றியது.

இந்த முறை சட்டமன்ற தேர்தலில், பாஜகவின் தமிழக - டெல்லி தலைமைகள் பெரும் முனைப்புடன் இந்தத் தேர்தலின் போக்கை தீர்மானிக்கும் நோக்கில் ஆறு மாதங்களுக்கு முன்னரே களத்தில் இறங்கின.

பாஜக தன்னை அதிமுக கூட்டணியின் தலைமையில் இருப்பது போல் பாவித்து, பல அறிக்கைகள் வெளியிட்டது, "அதிமுக கூட்டணியில் முதல்வர் வேட்பாளரை நாங்கள் தான் தீர்மானிப்போம்" - என்று பாஜகவின் தேசிய - தமிழக செயலர்கள் அறிக்கைகள் வெளியிட்டார்கள். ஆனால், மெல்ல மெல்ல நிலைமை மோசமானதும் "இல்லை, எங்களுடன் கலந்தாலோசித்தால் போதும்" - என்றார்கள், அதன் பின்னர், நிலைமை இன்னும் மேசமாக "எங்களிடம் அவர்கள் ஒரு தகவல் சொன்னால் போதும்" - என்று இடத்தை காலி செய்தார்கள்.

ஈற்றில், அதிமுக, பாமக, பாஜக என்ற மூன்று பெரும் கட்சிகளுடனும் சில உதிரிக் கட்சிகளையும் இணைத்துக் கொண்டு களத்தில் இறங்கியது. ஆனால், அவர்களின் கூட்டணியில் இடம் வகித்த தேமுதிக மற்றும் புதிய தமிழகம் கட்சிகள் கூட்டணியில் இருந்து வெளியேறின.

மறுபுறம், திமுக கூட்டணியில் காங்கிரஸ், இடது சாரிகள், விடுதலை சிறுத்தைகள், மதிமுக மற்றும் இன்னும் சில கட்சிகளை இணைத்துக் கொண்டு ஸ்டாலினை முதல்வர் வேட்பாளர் என்ற அறிவிப்புடன் அடுத்த பெரும் கூட்டணி களத்தில் இறங்கியது.

இவர்கள் தவிர்த்து, இந்த முறை தேமுதிக, நாம் தமிழர் மற்றும் மக்கள் நீதி மையம் ஆகிய கட்சிகளும் தமிழகம் முழுவதும் களம் கண்டன.

அதிமுக ஆட்சியில் இருப்பதாலும், அவர்கள் மத்திய ஆட்சியில் உள்ள பாஜகவுடன் கூட்டணியில் இருப்பதாலும் அவர்களுக்கு எல்லா விதங்களிலும் ஒரு லாவகம் இந்த தேர்தல் நெடுகிலும் இருந்தது.

"தண்டி யாத்திரைக்கு காந்தி புறப்பட்ட நாளில் நானும் பிரச்சாரத்திற்கு புறப்படுகிறேன்" - என்று நடிகர் கமலஹாசன் களத்தில் இறங்கினார். "நேர்மையின் பின்னால் வாருங்கள், காந்தி, காமராஜ், கலாம் பாதையில் நடந்து செல்கிறேன், கலாம் என்ற பெயலைத் திருப்பி போட்டா கமல் வரும்" - என்று அவர் ஒவ்வொரு நாளும் ஒரு விதமாக பேசினார். அகிர குரோசுவா, ஸ்டீபன் ஹாக்கிங்க் ரேஞ்சுக்கு பேசும் கமலிடம் இடஒதுக்கீடு பற்றிய கேள்வியை ஒரு தொலைக்காட்சி கேட்டதும் உடனடியாக "நான் எட்டாம் வகுப்பு படித்தவன். என்னிடம் இப்படி எல்லாம் கேள்விகள் கேட்கக் கூடாது" - என்று சாயம் வெளுத்து நின்றார்.

ஊழலை ஒழிக்கப் போகிறேன் என்ற கமல் கோவையில் ஐந்து நட்சத்திர விடுதியில் அறைகள் போட்டுக் கொண்டு, தனி விமானத்தில் தமிழகம் எங்கும் பறந்து கொண்டு, சிறிய தூரங்களுக்கு ஹெலிக்கொப்டரை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு, அதன் பின்னர் மக்களிடம் செல்லும்போது மட்டும் எளிமையாக ஆட்டோவில் பயணித்தார். கமலின் தேர்தல் பரப்புரைகளையும் கோவை வாக்கிங்களையும் பார்க்கும்போது அவர் ஒரு விடுமுறை மனநிலையில் இருப்பதை மக்களால் யூகிக்க முடிந்தது.

"நாம் தமிழர்" கட்சியின் சீமான் 234 தொகுதிகளிலும் தனது கட்சியை களம் இறக்கினார். "திராவிடக் கட்சிகளை ஒழித்துக் கட்டுவேன்" - என்று முழக்கம் எழுப்பிக் கொண்டே, சிறையில் இருந்து வெளிவந்த சசிகலா வீட்டுக்குச் சென்றார்.

"எந்த மாநிலத்திற்கும் தண்ணி போகாம எல்லா ஆறுகளிலும் அணையை கட்டிருவேன்", "பாஜக ஆட்சியில் 24 லட்சம் தொன் மாட்டுக்கறி ஏற்றுமதி செய்யப்படுகிறது, மாடு மேய்ப்பது, ஆடு மேய்ப்பது, நாட்டுக்கோழி வளர்த்தல், பட்டு பூச்சி வளர்த்தல், மீன் வளர்ப்பது எல்லாமே என் அரசாங்கத்தில் அரசு வேலையாக கருதப்படும்" - என சீமான் தினசரி வாயிற்கு வந்த படி ஒவ்வொரு மேடையிலும் சுவாரஸ்யமாக பேசுவதாக நினைத்துக் கொண்டு, அரசியல் தலைவர்களை ஒருமையில் விளித்துக் கொண்டிருந்தார். ஒவ்வொரு கூட்டத்திலும் "எனக்கு நம்பி வாக்கு செலுத்தினா நல்லா இருப்பீங்க, ரெட்ட இலை-உதயசூரியன் என்றால் நாசமாக போவீங்க" - என்று மக்களை பார்த்து சாபம் விட்டுக்கொண்டே தனது பயணத்தை தொடர்ந்தார் சீமான்.

இது எல்லாம் ஒரு புறம் என்றால், ஒவ்வொரு வேட்பாளரும் ஒவ்வொரு விதமாக களத்தில் இறங்கினார்கள். அதிமுகவின் அமைச்சர் ஒருவர் டீ மாஸ்டராக மாறி அனைவருக்கும் டீ போட்டு கொடுத்தார். ஒரு வேட்பாளர் வேட்புமனு தாக்கல் செய்ய காந்தி வேடம் அணிந்து வந்தார். பெட்ரோல் போடுவது, நாற்று நடுவது, துணி தேய்ப்பது, நடனமாடுவது, தோசை சுடுவது, சாக்கடை அள்ளுவது என ஒவ்வொரு வேட்பாளரும் புதிய புதிய அவதாரங்களை தினசரி எடுத்து, மக்களை எப்படியாவது ஈர்த்து விட வேண்டும் என்று கடுமையாக கரணமடித்தார்கள்.

மாநில உரிமைகளுக்கு முதலிடம், கல்வித் துறையை மாநில அரசுப் பட்டியலுக்குத் திரும்பக் கொண்டுவருதல், தமிழ்நாட்டுக்கு என தனிக் கல்விக் கொள்கையை உருவாக்குதல், ஒன்றிய ஆட்சி மொழிகளில் ஒன்றாகத் தமிழை இடம்பெறச் செய்வதற்கான முயற்சிகள், தமிழ்நாட்டில் உள்ள ஒன்றிய அரசு அலுவலகங்களில் தமிழை அலுவலக மொழியாக்குதல், உச்ச நீதிமன்றப் பணிகளைப் பரவலாக்கிவிடும் வகையில் தமிழகம் உள்ளிட்ட நான்கு மாநிலங்களில் மேல்முறையீட்டு நீதிமன்றங்களை உருவாக்குதல், தமிழை உயர் நீதிமன்ற மொழியாக அங்கீகரித்தல் ஆகிய திட்டங்களை திமுக முன்வைக்கிறது. உலகத்தின் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் தமிழ் இருக்கைகள் நிறுவப்படும் என தொடங்கிய திமுகவின் தேர்தல் அறிக்கை மிக தெளிவாக அவர்களின் பயணத் திசைவழியை முன்வைத்தது.

ஆண்டுக்கு ஆறு சிலிண்டர், வீட்டுக்கொரு வாஷிங் மெஷின், ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தை 150 நாட்களுக்கு விரிவுபடுத்துதல், ஊதியத்தை ரூ. 300 ஆக உயர்த்துவது என தொடங்கிய அதிமுகவின் தேர்தல் அறிக்கை ஏறத்தாள திமுக தேர்தல் அறிக்கை முன்வைத்த பல அம்சங்களை அப்படியே முன்மொழிந்தது.

தேர்தல் களம் மிகவும் சூடுபிடித்தது, தேர்தல் அறிக்கைகளைப் பற்றிய பெரும் விவாதங்கள் நடந்தன, இந்த முறை தொலைக்காட்சிகள் முக்கிய பங்கு வகித்த போதும், அதனை விடவும் காத்திரமான களமாக சமூக ஊடகங்கள் உருவெடுத்தன. சமூக ஊடகங்களின் அன்றாடப் பிரச்சாரங்கள் குறித்த மதிப்பீடுகள் முதல், அன்றைய நாளின் பேச்சுகள் வரை காட்டுத்தீ போல் பகிரப்பட்டன.

உதயநிதி தன் கையில் வைத்திருந்த எய்ம்ஸ் மருத்துவமனை என்கிற செங்கல் முதல் உபி முதல்வர் யோகி ஆதித்யநாத் வந்தபோது நிகழ்ந்த கலவரத்தில் வீசப்பட்ட செங்கல் என இவை இரண்டும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தின.

விலைவாசி உயர்வு, பெட்ரோல்-டீசல் வரலாறு கணாத விலையுர்வு, சமையல் காஸ் விலையுர்வு, ஜி.எஸ்.டியால் சிறு குறுதொழிகள் நசிவு, எட்டு வழிச்சாலை, ஹைட்ரோ கார்ப்பன், நீட் தேர்வு என பல முக்கிய விஷயங்கள் மக்களின் அண்றாடங்களை சீர்குலைத்து ஒரு அரசியல் உருவெடுத்திருந்தது.

ஜாதி, அதிகாரம், பணம் என்கிற காரணிகளை எல்லாவற்றையும் தாண்டி, இந்த முறை சமூக ஊடகங்கள் மக்களின் மனங்களை தகவமைப்பதில் முக்கிய பங்காற்றியிருக்கிறது.

இதையெல்லாம் தாண்டி, தமிழகத்திற்கு புதிய அனுபவம் என்பது, தேர்தல் முடிந்து ஒரு மாதம் கழித்து வாக்கு எண்ணிக்கை என்பதே, இந்த ஒரு மாத கால தாமதம் எதற்கானது? இதில் ஏதும் சூழ்ச்சிகள் நடைபெற வாய்ப்புள்ளதா என்ற சந்தேகங்களுடன்தான் எல்லா கட்சிகளும் முடிவுகளை எதிர்நோக்கி காத்திருக்கின்றன.

ஆனால் மே 2 ஆம் திகதிக்குள் இன்னும் என்னவெல்லாம் நடைபெறுமோ என்கிற அளவில் அரக்கோணத்தில் தலித் இளைஞர்கள் இரண்டு பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் ஒரு அச்சமான சூழலை ஏற்படுத்தியுள்ளது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிவரவாளர்கள் உள்நாட்டவர்களின் வேலைகளை திருடுகிறார்களா?



ஜேர்மனியிலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்து வந்திறங்கியபோது...

முன்னொரு காலத்திலே, 'வீட்டிலிருந்து வேலை செய்யப் போகிறேன்' என்று ஒருவர் சொன்னால், 'முற்றத்தில் புல் வெட்டப் போகிறார்' என்று மனதுக்குள் மற்றவர்கள் நினைப்பதுண்டு. ஆனால், கொள்ளை நோய் ஒன்று வந்து நம்மையெல்லாம் ஆட்டிப் படைத்தபோது, வீட்டிலிருந்து வேலை செய்வது அனேகமானவர்களுக்கு நியதி என்றாகிவிட்டது.

COVID-19 தொற்று, உலகம் முழுவதும் தொழில் செய்பவர்களில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆஸ்திரேலியா அதற்கு விதிவிலக்கல்ல.

இதன் தாக்கம் மிக அதிகமாகத் தென்பட்ட 2020ஆம் ஆண்டு வேலை இழந்தவர்கள் அல்லது அவர்கள் வேலைக்கு வர வேண்டாம் என்று சொல்லப்பட்ட பகுதி நேர வேலை செய்பவர்களில் 94% சதவீதமானவர்கள், இப்போது மீண்டும் வேலை செய்ய ஆரம்பித்துள்ளனர் என்று ஆஸ்திரேலிய புள்ளிவிபரத்துறையின் தரவுகள் கூறுகின்றன.

ஆனால், இந்தத் தொற்றின் விளைவாக, தற்காலிக விசாவில் இங்கு வேலை செய்து வந்தவர்களில் சுமார் 5 இலட்சம் பேர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள். அவர்களில் சிலர் அவர்கள் திரும்பிச் சென்ற நாட்டிலிருந்து கொண்டே வேலை செய்கிறார்கள். வீட்டிலிருந்து வேலை செய்வதென்றால் சிட்னியில் இருந்தாலென்ன சென்னையில் இருந்தாலென்ன?

இருந்தாலும், தமக்குத் தேவையான திறமை வாய்ந்தவர்களை வேலைக்கமர்த்துவதில் சிக்கல் இருக்கிறது என்றும், அந்தப் பற்றாக்குறையைப் போக்க அரசு வழி செய்ய வேண்டுமெனவும் நாட்டின் பல தொழில் நிறுவனங்கள் கோரிக்கைகளை முன்வைத்தன.

**ஆஸ்திரேலியாவில் தங்கம் இருப்பது தெரிந்தவுடன் 1850 இல் சுமார் 6 இலட்சம் பேர் இங்கே குடி வந்தார்கள். அவர்களில் 81 சதவீதத்தினர் பிரித்தானியர்கள், 10 சதவீதத்தினர் ஐரோப்பியர்கள், மற்றும் 7 சதவீதத்தினர் சீனர்கள்.**

நாடளாவிய ரீதியில் வேலைக்கான காலியிடங்கள் சுமார் 2 இலட்சத்து 54 ஆயிரத்தை எட்டியுள்ளதாக, கடந்த நவம்பர் மாதம் நாடாளுமன்றக் குழு விசாரணையில் தெரியவந்தது. கடந்த 10 ஆண்டுகளில், 2020 ஆம் ஆண்டுதான் மிக அதிகமான வேலைக்கான காலியிடங்கள் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த விசாரணையில் ஒரு சுவாரசியமான விடயம் வெளியானது. இது அரசியல்வாதிகளுக்குக் கசப்பான விடயமாக இருக்கலாம், தொழிற் சங்கப் பிரதிநிதிகள் இதனை எதிர்க்கலாம், வெளிநாட்டவரை உள்ளே விடாதீர்கள் என்று கோஷமிடுபவர்களை சினம் கொள்ள வைக்கலாம். ஆனால், உண்மை என்னவென்றால், உலகமயமாகியுள்ள பொருளாதாரத்தில் மற்றைய முன்னேறிய நாடுகளுடன் சரிசமனாகப் போட்டியிட, இந்நாட்டில் போதுமான மனித வளங்கள் இல்லை என்பதுதான் உண்மை.

எனது நாடு, எனது மக்கள் என்று மற்றைய விடயங்களில் மார்தட்டிக் கொள்பவர்கள் தமக்குத் தேவையான திறமைகளைத் தன்னகத்தே உருவாக்குவதுதானே முறை? ஆனால், உலக நியதி அதுவல்ல. வளர்ந்துவரும் நாடுகளுக்கு உதவித் தொகை என்று வழங்குவது, அங்குள்ள சிறுவர்களின் எதிர்காலம் நன்றாக அமையவேண்டும் என்று சிறுவர்களுக்கு ஊட்ட சத்து, கல்வி வசதி என்று அமைத்துக் கொடுப்பது, அதன் மூலம் திறமைசாலிகளை உருவாக்குவது, அவர்கள் மேற்படிப்பு படிக்க என வளர்ந்த நாடுகள் புலமைப்பரிசில்களை வழங்குவது, அப்படி மேற்படிப்புப் படித்தவர்களைத் தமது சொந்த நாட்டிற்குத் திரும்பி செல்லுங்கள் என்று ஊக்குவிக்காமல் வளர்ந்த நாடுகளிலேயே தங்கிவிடுவதற்கான வசதிகளை செய்வது.

கரும்புத் தோட்டங்களுக்கும் தேயிலைத் தோட்டங்களுக்கும் தேவையான கூலியாட்களைக் கூட்டிச் சென்றதற்கும் இப்படி திறமைசாலிகளை அவர்கள் பிறந்த நாட்டில் வளர்த்து, முன்னேற்றம் என்று ஆசை காட்டி வளர்ந்த நாடுகளுக்கு வரவைத்து அந்த நாட்டிலேயே தங்க வைப்பதற்குமான வித்தியாசம் ஒரு மயிரிழைதான் என்பது எனது கருத்து.

ஆனால், குடிவருபவர்கள் இந்த நியதியைப் புரிந்து கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. குடிவருபவர்களால் நகரங்களில் வீட்டின் விலைகள் உயருகின்றன என்றும், போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது என்றும் தங்கள் வேலைகளுக்கு ஆபத்து என்றும் பல்வேறு விதமான எதிர்மறையான, உண்மைக்குப் பொருந்தாத கருத்துகள் மக்களிடையே நிலவுகிறது. ஊடகங்களும் இந்தக்காரணிகளை பெரிதாக ஊதிப்பெருப்பித்து, குடிவரவாளர்கள் குறித்த அகோரமான விம்பத்தையே மக்கள் மனதிலும் ஏற்படுத்தி வருகிறது.

### அதற்கு மக்களை குறை சொல்ல முடியுமா?

சரித்திரத்தில் சற்று பின்னோக்கிப் பார்த்தால், ஆஸ்திரேலிய பூர்வீக குடி மக்கள் தவிர, இங்கு வாழும் அனைவரும் ஏதோ ஒரு சமயத்தில் குடிவந்தவர்கள்தான். அது தவிர, முதலில் வந்த பிரித்தானிய கைதிகள் மற்றும் அவர்களுடன் வந்த படையினர் மற்றும் குடும்பத்தினரைத் தொடர்ந்து, நாட்டில் மனித வளத்திற்குத் தேவை ஏற்பட்ட போதெல்லாம், நாட்டிற்கு மக்களைக் குடியேற வழி செய்துள்ளது ஆஸ்திரேலிய அரசு. (பிரித்தானியர்கள் என்று சொல்வதை விட, பிரித்தானியக் கைதிகள் என்று சொல்வதுதான் சரி. வந்தவர்களில் 11 பேர் ஆபிரிக்கப் பின்னணி கொண்டவர்கள், வேறு பலர் ஸ்கொட்லாந்து, கனடா மற்றும் மேற்கிந்திய தீவுகளில் இங்கிலாந்திற்கு எதிராகக் குரல் கொடுத்த அரசியல் கைதிகள்.) இங்கே வந்திறங்கியவர்கள் பலர் தனி ஆண்கள் என்பதால் திருமணமாகாத பெண்களை இந்நாட்டிற்கு வரவழைக்க 1832ஆம் ஆண்டு ஒரு திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

ஆஸ்திரேலியாவில் தங்கம் இருப்பது தெரிந்தவுடன் 1850 இல் சுமார் 6 இலட்சம் பேர் இங்கே குடி வந்தார்கள். அவர்களில் 81 சதவீதத்தினர் பிரித்தானியர்கள், 10 சதவீதத்தினர் ஐரோப்பியர்கள், மற்றும் 7 சதவீதத்தினர் சீனர்கள். இந்தப் பெரிய நாட்டில் தொலைபேசி இணைப்பை மேற்கொள்வதற்குத் தேவையான கம்பிகளை இணைக்கவும், இரயில் பாதைகள் அமைக்கவும் ஒட்டகங்களும் அதனுடன் ஆஃப்கனிஸ்தான் மற்றும் பாகிஸ்தானிலிருந்து சுமார் 2,000 பேர் 1870ஆம் ஆண்டு முதல் இங்கே கொண்டு வரப்பட்டார்கள்.

அதேகாலப்பகுதியில், குயின்ஸ்லாந்து மாநிலத்தில் கரும்புத் தோட்டங்களில் வேலை செய்யவென, பசிஃபிக் தீவு மக்கள் 62,000 பேர் அடிமைகள் போல கொண்டு வரப்பட்டார்கள். (அவர்களில் 12 வயதிற்கு உட்பட்ட சிறுவர்களும் அடங்குவர் என்பது வெட்கத்துக்குரிய விடயம்.)

பல காலனிகளாக காடு மேடாக இருந்த இந்தப் பரந்த கண்டம், ஆஸ்திரேலியா என்ற ஒரு நாடாக 1901 உருவெடுத்த பின்னர் அறிமுகமான முதல் சட்டங்களில் ஒன்று, "இந்த நாடு வெள்ளையருக்கு மட்டுமே" என்பது. தோல் வெள்ளை நிறமாகவும், ஐரோப்பாவிலிருந்து வந்திருந்தாலும், ஆங்கிலத்தை ஆங்கிலேயர்கள் போன்று உச்சரிக்கத் தெரியாதவர்களுக்குக் குடியுரிமை வழங்கப்படவில்லை. முதலாம் உலகப் போர் ஆரம்பிக்கும்வரை சுமார் நான்கு இலட்சம் பேர் பிரித்தானியாவிலிருந்து வந்து இங்கு குடியேறினார்கள். உலகப் போர் ஆரம்பித்த சில வருடங்களில் புதிதாகக் குடிவந்தவர்களின் எண்ணிக்கை குறைவானது.

"வாருங்கள் வாருங்கள், எங்கள் நாட்டில் வந்து குடியேறுங்கள்" - என்று பிரித்தானியாவில் மேற்கொள்ளப்பட்ட பிரச்சாரத்தைத் தொடர்ந்து, சுமார் ஒரு இலட்சம் பிரித்தானியர்கள் உட்பட கிரேக்கர்கள், இத்தாலியர்கள் மற்றும் (தற்போது ஏழு நாடுகளாகப் பிரிக்கப்பட்டுள்ள) யூகோஸ்லாவிய நாட்டு மக்கள் என்று சுமார் மூன்றரை இலட்சம் பேர் ஆஸ்திரேலியாவிற்குக் குடி வந்தார்கள்.

இப்போதுள்ள மக்கள் மன நிலையைப் போலவே, அப்போதும் பொருளாதாரத்தில் மந்த நிலை தோன்றியதும், குடிவந்தவர்கள் மீது மக்கள் தங்கள் வெறுப்பைக் காட்டத் தொடங்கினார்கள். அவர்களது நல்ல காலமோ என்னவோ, இரண்டாம் உலகப் போர் ஆரம்பித்தது. அதைத் தொடர்ந்து குடிவருபவர்களின் எண்ணிக்கையும் பாரிய வீழ்ச்சியைக் கண்டது.

போர் என்று வந்தால், போர்க் கைதிகளும் உருவாகுவார்கள் இல்லையா? கைதிகளால் கட்டியெழுப்பப்பட்ட இந்நாடு சுமார் 18,000 இத்தாலிய போர்க்கைதிகள், 5,000 ஜப்பானியப் போர்க்கைதிகள் மற்றும் 1,500 ஜேர்மனிய போர்க்கைதிகளைக் கையேற்றது. இரண்டாம் உலகப் போர் முடிவடைந்து விடுதலையானாலும், கைதிகளில் பலர் ஆஸ்திரேலியாவிலேயே தங்கி விட்டார்கள்.




கவல்கணன்

# ஆச்சரியமளிக்கும் ஆஸ்திரேலிய ஆளணி குறித்த அதிரடி விசாரணை!

இரண்டாம் உலகப் போர் முடிந்த பின்னர்தான், ஆஸ்திரேலியாவில் குடிவரவுத் துறை என்ற ஒரு அமைச்சே உருவானது. 1948ஆம் ஆண்டில்தான் "ஆஸ்திரேலிய குடியுரிமை" முதன்முதலாக வழங்கப்பட்டது.

அதைத்தொடர்ந்த சில ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட நீர் மின் நிலையத்தைக் கட்டியமைக்கவென சுமார் ஒரு இலட்சம் ஐரோப்பியர்கள் ஆஸ்திரேலியாவிற்கு அழைத்துவரப்பட்டார்கள்.

1960 களின் நடுப்பகுதியிலிருந்து வெள்ளையர் அற்றவரும் நாட்டினுள் அனுமதிக்கப்பட்டிருந்தாலும், 1972ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட புதிய குடிவரவுக் கொள்கைகள்தான் இந்நாட்டை ஒரு பல்கலாச்சார நாடாக மாற்றியது.

வியட்நாமில் நடந்த உள்நாட்டுப் போரைத் தொடர்ந்து படகு மூலம் பலர் ஆஸ்திரேலியாவிற்குப் புகலிடம் தேடி வந்த பின்னர்தான், அவர்கள் அறிமுகம் செய்த கலாச்சாரம் - பண்பாடுகளின் வழியாக ஆஸ்திரேலியர்களில் உணவில் சோறு (அல்லது சாதம்) அதிகமாக சேர்க்கப்பட்டது.

'குடும்பத்தினருடன் ஒன்று சேர', 'திறமையின் அடிப்படையில், மற்றும் 'புகலிடம் கோரி' என்று மூன்று வழிகளில் இந்நாட்டிற்குக் குடிவர முடியும் என்ற கட்டமைப்பு 1980 களின் இறுதிப் பகுதியில் உருவானது.

பண்ணைகளிலும் தோட்டங்களிலும் பருவ காலத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கென வேலையாட்கள் வெளிநாடுகளிலிருந்து இங்கு வரவழைக்கப்பட்டாலும், அவர்கள் பெரும்பாலும் சிலகாலம் இந்நாட்டில் வேலை செய்து விட்டு சொந்த நாட்டிற்குத் திரும்பிவிடுவார்கள்.

அதேபோலத்தான், இரண்டாயிரமாம் ஆண்டு பிறக்கும் போது, கணினிகள் செயலிழந்து போகும் என்ற ஒரு பீதி வந்ததும் அளவுக்கதிகமான கணினி தொழில்நுட்ப வல்லுநர்கள் இங்கு அழைத்து வரப்பட்டார்கள். பலரும் எதிர்பார்த்தது போல் அந்த ஆண்டு கடந்த போது, கணினிகள் செயலிழக்கவில்லை. ஆனால், அழைத்துவரப்பட்ட தொழில் நுட்ப வல்லுநர்கள், அவர்கள் பணியாற்றிய நிறுவனங்களில் வேறு வகையில் செயல்பட முடியும் என்பதை உணர்ந்த நிறுவனங்கள், அவர்களைத் தொடர்ந்தும் பணிக்கமர்த்தின. அதிலிருந்து, இந்தியத் துணைக்கண்டத்தைச் சார்ந்த பலரும் இந்த நாட்டிற்குக் குடிவந்தார்கள்.

தற்போதைய ஆஸ்திரேலிய அரசியலில், நாட்டின் குடிவரவுக் கொள்கையில் இரண்டு பெரிய கட்சிகளுக்கிடையில் பாரிய வேறுபாடு இல்லையென்றாலும், தொழிற்சங்கங்களை சார்ந்திருக்கும் லேபர் கட்சியின் கொள்கைகளில் 'இங்குள்ளவர்களுக்குக் கிடைக்க வேண்டிய வேலையை குடிவருபவர்கள் எடுத்துக் கொள்வார்கள்' என்ற பயத்தின் வெளிப்பாடும், நிறுவனங்களிலும் பெரும் தொழிலதிபர்களிலும் சார்ந்திருக்கும் லிபரல் கட்சியின் கொள்கைகளில் 'திறமைகளை எப்படி மலிவாக உள்வாங்கலாம்' என்ற சிந்தனையின் வெளிப்பாடும் பரவலாகத் தெரிகிறது.

அடிப்படையில் எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும், 'குடும்பத்தினருடன் ஒன்று சேர', 'திறமையின் அடிப்படையில்', மற்றும் 'புகலிடம் கோரி' என்று மூன்று வழிகளில் இந்நாட்டிற்குக் குடிவர முடியும் என்ற அடிப்படைக் கட்டமைப்பு பேணப்பட்டாலும், யார் ஆட்சியில் இருக்கிறார் என்பதைப் பொறுத்து அவற்றின் செயல் வடிவம் மாறுபடுகிறது.

'புகலிடம் கோரி' வருவோரை லிபரல் அரசு நடத்துகின்ற முறை குறித்து ஐக்கிய நாடுகள் சபையே பல தடவை விமர்சித்துள்ளது. அது குறித்து இங்கு அதிகம் பேசவில்லை. கட்சி வேறுபாடின்றி 'குடும்பத்தினருடன் ஒன்று சேர' விரும்புவர்களில் எத்தனை பேரை அனுமதிப்பது என்ற எண்ணிக்கை குறைந்து கொண்டு வருகிறது. அது குறித்தும் இங்கு எதுவும் பேசவில்லை.

'திறமையின் அடிப்படையில்' எத்தனை பேரை, எப்படி அனுமதிப்பது என்பது குறித்துத்தான் நாடாளுமன்றத்தில் விசாரணை நடைபெற்றது, இடைக்கால அறிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது.

குடிவந்தவர்கள் - குறிப்பாக திறமை அடிப்படையில் குடிவந்தவர்கள் - ஆஸ்திரேலிய பொருளாதார முன்னேற்றத்திற்குப் பாரிய பங்கு வகிக்கிறார்கள் என்பது இந்த அறிக்கையில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

தொற்று நோயின் விளைவாக, நாட்டை விட்டு வெளியேறிய 'திறமை' சாலிகள் நாடு திரும்பாவிட்டால் ஆஸ்திரேலியாவின் பொருளாதார மீட்சி கடுமையாகத் தடைப்படும் என்றும் நாட்டிலுள்ளவர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்குவது கடினமாக இருக்கும் என்றும் இந்த விசாரணை கண்டறிந்துள்ளது.


ஆஸ்திரேலிய சுங்க அதிகாரியின் கைகளில் வியட்நாமிய அகதிக் குழந்தை

இந்த விசாரணையில் சாட்சியளித்த பல நிறுவனங்கள், தாம் குடிவருபவர்களைவிட ஆஸ்திரேலியர்களை வேலைக்கு அமர்த்த விரும்பினாலும் அவர்களுக்குத் தேவையான 'திறன்கள்' எப்போதும் இங்கே கிடைப்பதில்லை என்று தெளிவுபடுத்தியுள்ளனர்.

அப்படி திறமையின் அடிப்படையில் இங்கு குடிவருபவர்கள் ஆஸ்திரேலிய பட்டதாரிகளின் வேலைகளையோ, வேறு திறமைகள் கொண்டவர்களின் வேலைகளையோ 'திருடுவதில்லை' என்றும் நிறுவனங்களுக்குத் தேவையான 'திறமை' வெற்றிடங்களை அவர்கள் நிரப்புகிறார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

COVID-19 நோய்த் தொற்றைத் திறம்படக் கட்டுப்படுத்தி, நிர்வகித்த காரணத்தால், குடிபெயர விரும்புபவர்கள், மற்றைய நாடுகளைவிட ஆஸ்திரேலியாவிற்குக் குடிபெயர ஈர்க்கப்படுகிறார்கள் என்று இந்த இடைக்கால அறிக்கை கூறுகிறது.

**பொறியியலாளர்கள், இயந்திரங்களைப் பழுது பார்க்க வல்லவர்கள், சமையல்காரர்கள், தச்சுத் தொழில் செய்வோர், மின்வினைஞர்கள், உடல்நலம் உட்பட பல துறையினரையும் திறமை அடிப்படையில் நாட்டிற்குக் கொண்டுவர முயற்சிகள் நடக்கின்றன.**

இந்த விசாரணையின் இறுதி அறிக்கை ஜூலை மாதம் வெளியிடப்படும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், இடைக்கால அறிக்கையில் முன் வைக்கப்பட்டுள்ள சில பரிந்துரைகளை குடிவரவுத்துறை ஏற்கனவே நடைமுறைப் படுத்த ஒழுங்கு நடவடிக்கைகள் எடுத்து வருவதாக செய்திகள் கசிந்துள்ளன.

பலவகை பொறியியலாளர்கள், இயந்திரங்களைப் பழுதுபார்க்க வல்லவர்கள், சமையல்காரர்கள், தச்சுத்தொழில் செய்வோர், மின்வினைஞர்கள், உடல்நலம், வர்த்தகம் மற்றும் வேளாண்மை ஆகிய துறைகளில் பணிபுரிபவர்கள், உற்பத்தி ஆலைகளில் பலவிதமான வேலைகள் செய்யக் கூடியவர்கள் என்று பலரையும் திறமை அடிப்படையில் நாட்டிற்குக் கொண்டுவர முயற்சிகள் நடக்கின்றன. திறமையின் அடிப்படையில் குடிவருபவர்கள் இலகுவில் நாட்டை வந்தடைய, விமானங்களில் மற்றும் தனிமைப்படுத்தல் விடுதிகளில் அவர்களுக்கென்று இடங்களை ஒதுக்குவதையும் பரிசீலனை செய்கிறது குடிவரவுத் துறை.

தொற்று நோய் காலத்தில் பலரும் வீட்டிலிருந்து வேலை செய்ததாலோ என்னவோ, இந்த வருடம் பிறப்பு எண்ணிக்கை அதிகரிக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

'குடும்பத்தினருடன் ஒன்று சேர', 'திறமையின் அடிப்படையில்', மற்றும் 'புகலிடம் கோரி' என்று மூன்று வழிகளில் இந்நாட்டிற்குக் குடி வர முடியும் என்ற அடிப்படைக் கட்டமைப்பு பேணப்பட்டாலும், மொத்தமாகக் குடிவருபவர்களின் எண்ணிக்கைக்கு ஒரு உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பிறப்பு எண்ணிக்கை அதிகரிக்கிறது, 'திறமையின் அடிப்படையில்' வருபவர்கள் எண்ணிக்கை அதிகரிக்கிறது என்றால், 'குடும்பத்தினருடன் ஒன்று சேர' நினைப்பவர்களும், 'புகலிடம் கோரி' வர நினைப்பவர்களும் (ஏற்கனவே வந்து சேர்ந்தவர்களும்) இந்நாட்டில் குடியுரிமை பெற மிக நீண்ட நாட்கள் காத்திருக்க வேண்டி வரலாம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகதிகளின் வலி சுமந்த வாழ்க்கை



# தொடர் சாவின் சகதிக்குள் மீண்டெழுந்து ஆஸியில் கரையொதுங்கிய அகதியின் கதை

தாயகத்தில் போர் இடம்பெற்ற காலப்பகுதியில் மட்டுமல்ல, அதன் பின்னரும்கூட ஆஸ்திரேலியா நோக்கிவரும் அகதிப்படகுகளின் எண்ணிக்கை கிடுகிடுவென அதிகரித்தது. இவ்வாறு அதிகரித்த அகதிகளின் வருகையானது, ஆஸ்திரேலியாவில் ஆட்சிமாற்றங்கள் ஏற்படுவதற்கான காரணிகளில் ஒன்றாக அமைந்தது எனலாம். அதேபோல, லிபரல்கள் ஆட்சியைப் பிடிப்பதற்கும் - தக்கவைத்துக்கொள்வதற்கும் "அகதிகள்" விவகாரத்தை பிரதான ஆயுதமாக பயன்படுத்தும் நிலைமையும் நீடிக்கின்றது.

குறிப்பாக, "சட்டத்தின் இரும்புத்திரையை அகல விரித்து, படகுவழி அகதிகளின் வருகையை கட்டுப்படுத்தி, ஆஸ்திரேலியர்களை பாதுகாப்போம்" என்று கொக்கரிக்கும் லிபரல் அரசு, தற்போது இங்குள்ள "அகதிகள்" விவகாரத்தில், மனிதநேயமற்ற வகையிலேயே செயற்பட்டுவருகின்றது. இதனால்தான் ஆஸி. மண்ணில் தஞ்சமடைந்துள்ள அகதிகளின் பலரின் விடுதலைக்காக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. மாறாக, அகதிகளுக்கு எதிராக, உளவியல் ரீதியிலும் போர் தொடுக்கப்பட்டுள்ளது. "இங்கு இருந்து வதைபடுவதைவிட ஊருக்கு சென்றுவிடுவோம்" - என அகதிகள் மனம்நொந்து சிந்திக்குமளவுக்கு, வதைகள் உச்சம் தொட்டுள்ளன என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இது ஒருபுறமிருக்க, அகதிகளின் விடுதலைக்கான போரட்டங்களும் ஆஸ்திரேலிய மண்ணில் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. எப்படித்தான் போரடினாலும் அகதிகள் விடயத்தில் கரிசினைக்கு இடமில்லை என்பதை லிபரல் அரசு அடிக்கொரு தடவை தனது செயற்பாட்டின் ஊடக வெளிப்படுத்தியே நிற்கிறது.

நவ்று, பப்புவா நியூ கினி போன்ற வனாந்தர நிலங்களில் அடைப்பு, உரிய மருத்துவ ஏற்பாடுகள் இன்மை, அகதிகளாக அங்கீகாரம் பெற்றவர்களுக்குகூட குடும்பத்துடன் இணைந்து சுதந்திரமாக வாழமுடியாமை உட்பட இந்த வதைப்பட்டியல் நீள்கிறது.

இவ்வாறு கெடுபிடிகள், நிபந்தனைகள் ஆகியவற்றுக்கு மத்தியில் வாழும் அகதிகளில் பலரை எதிரொலியின் "அகதிகளின் வலி சுமந்த வாழ்க்கை" எனும் பகுதி இனங்காட்டிவந்திருக்கிறது. அந்தவகையில், இம்முறையும் அகதியொருவரின் வலிகளை தாங்கிவருகின்றது இப்பகுதி.

அவருடன் பேச ஆரம்பித்தோம். தான் யாரென பகிரங்கமாக அடையாளப்படுத்த விரும்பாதவர், "வணக்கம்" கூறிவிட்டு கடந்துவந்த பாதை பற்றி விவரிக்க துவங்கினார்.

"எனது சொந்த ஊர் வடமராட்சி (யாழ்ப்பாணம்). எனக்கு 18 வயதிருக்கும்போது போராட்டத்தில் இணைந்தேன். நான் போராட்டத்தில் இணைவதற்கு குடும்ப வறுமையோ, காதல் தோல்வியோ காரணம் அல்ல" - என எடுத்துரைத்துவிட்டு இயக்கத்துடன் இணைந்துகொண்டமைக்கான காரணம் மற்றும் ஆரம்பகால வாழ்வு பற்றி விவரித்தார்.

"எனக்கு ஒரே ஒரு தங்கை. மூன்று தம்பிகள். நான்கு வயதிலிருந்தே இடப்பெயர்வு வாழ்வு தொடர்ந்தது. மயிலிட்டித்துறையிலிருந்து இடம்பெயர்ந்து பருத்தித் துறையில் வசித்தோம். அன்றே நாங்கள் அகதி நாமம் சூட்டப்பட்டோம். அன்று ஆரம்பமான அந்த அகதி வாழ்வு இன்றுவரை தொடர்கிறது.

"எனது அப்பா ஒரு கடல் தொழிலாளி. 1996 ஆண்டு நடுப்பகுதியென நினைக்கிறேன், விடுதலைப்புலிகள் யாழ் குடா நாட்டை விட்டு வெளியாகியிருந்த காலம் அது. அவர்கள் வெளியேறும்வரை கடற்படையினரின் தொந்தரவைத்தவிர அப்பாவின் தொழிலுக்கு வேறு எந்த இடையூறும் இருக்கவில்லை. அதன் பின்னர் வந்த இலங்கை இராணுவம், கடல் தொழிலுக்கு செல்வதற்கான 'பாஸ்' நடைமுறையைக் கொண்டுவந்தது.

"உரிய முறையில் விண்ணப்பித்துப் பெறப்பட்ட அனுமதி பத்திரத்தைக் கொண்டுதான் கடலுக்குச் செல்லவேண்டும். கடற்படையினரால் அறிவிக்கபட்ட நேரத்திற்கு முன்னர் கடலுக்கு சென்றால் அடி, உதை என அடக்குமுறை தலைவிரிக்கும். அப்பாவின் முகம், அவர் அணிந்திருக்கும் உடைகள் என்று அனைத்திலும் அடிக்கடி கடற்படையினரின் சப்பாத்து தடம் பதிந்திருக்கும். தடம் இல்லாத நாட்கள் குறைவு என்றே கூறவேண்டும்.

"அப்போது நான் படித்துக் கொண்டிருந்தேன். என் சொந்த நிலப்பறிப்பின் பின்னணியிலும் அப்பாவின் வலிகளுக்கு பின்னாலும் இருப்பது அந்த ஆக்கிரமிப்புப் படைதான். அந்த படைகளின் அட்டூழியம் மட்டுமே என் மனதை இறுக்கிக்கொண்டிருந்தது.

உண்மையில் என் தகப்பன் மாற்றான் கையால் அடிவாங்குவதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இந்த உணர்வு தந்தையை நேசிக்கும் ஒவ்வொருவருக்கும் புரியும். இதற்கு விதை போடும் விதமாக 2002 உருவான சமாதான பேச்சு காலப்பகுதியை நான் பயன்படுத்தினேன். அன்றைய காலப்பகுதியிலேயே நான் போராட்டத்தில் என்னை இணைத்துக்கொண்டேன். பயிற்சிக்காலங்களங்களோடு மீண்டும் யுத்தத மேகமும் சூழ்ந்து கொண்டது.

"2006 காலப்பகுதியில் எனது குடும்பமும் வன்னிக்கு இடம்பெயர்ந்தது. இறுதியுத்தத்தில் இலங்கை அரச படைகள் குண்டு மழை பொழியாத இடங்கள் எதுவுமே இல்லை. என்னாலும் எமது குடும்பத்தைப் பார்க்க முடியவில்லை. விடுதலைப்புலிகளின் தளத்துக்கு அருகிலேயே எனது பெற்றோர் குடியிருந்தனர். 2008 ஏப்ரல் மாதமளவில் 'புலிகளின் தளத்தை இலக்கு வைத்து அழிக்கிறோம்" - என்று விமானப்படையினர் நடத்திய தாக்குதலில், எனது தங்கையை இழந்தேன். அப்போது அவளுக்கு 15 வயது. எனது ஒரே ஒருதங்கை. எல்லோராலும் பாசம் வைக்கப்பட்டவள். அவளின் உடல் கிழித்த சன்னங்களால் நாமும் உருகுலைந்தோம்" என்றவர் கண்களில் நிறைந்த கண்ணீரை திரும்ப திரும்ப துடைத்தார். வருடங்கள் கடந்து பொங்கிவந்த வலியை மிகுந்த சிரமத்தோடு மறைக்க முயற்சித்தார்.

"இந்த இழப்பை தாங்கிக்கொள்ள முடியாத நிலையில், குடியிருந்த நிலப்பரப்புக்கு அருகிலேயே தங்கையின் சடலத்தைப் புதைத்துவிட்டு, அந்த இடத்தைவிட்டு வேறு இடமொன்றுக்கு குடிபெயயர்ந்தோம். நானும் பழையபடி தளத்துக்குத் திரும்பிவிட்டேன்.

"தங்கையின் இழப்பு அப்பாவை நிலைகுலையவைத்து விட்டது. அவருக்கு எப்போதும் தங்கையின் நினைப்புதான். அவர் உயிரிழக்கும்வரை தங்கையின் நினைவு அவரை தினமும் வாட்டி வதைத்திருந்தது. இழப்பின் கோரத்திலிருந்து விடுபடமுடியாமல் தவித்தார். கடைசியில், போர் முடிவதற்கு ஓரிரு நாட்களுக்கு முன்னர், நடத்தப்பட்ட எறிகணை தாக்குதலில் அப்பா அவர் மிகவும் நேசித்த தனது மகளிடமே போய்ச்சேர்ந்தார். அவரை கடசியாக தங்கையின் மரண வீட்டில் பார்த்திருந்தேன். அதன் பின்னர் எப்போதும் பார்க்க மாட்டேன் என்று நினைத்திருக்கவில்லை.

அக்காலகட்டத்தில் என்னால் குடும்பத்தினருடன் நெருங்க முடியவில்லை. அங்கிருந்த சுற்றத்தினரே அவரையும் அடக்கம் செய்தனர்"

திரும்பவும் அவர்கள் கண்களில் துயரம் ததும்பி கண்ணீராய் வழிந்தது.

தங்கையையும் தந்தையையும் இழந்த வலி அவரையும்கூட இன்றுவரை நிலைகுலைய வைத்துள்ளது என்பதை உணரமுடிந்தது. வலி சுமந்த வாழ்வே அவரின் மனத்திரையில் பதிவாகியுள்ளது.

"யுத்தத்தின் இறுதி நாளன்று தனியாகவே சென்று இராணுவத்தினரிடம் சரணடைந்தேன். குடும்பத்தினர் நிலை என்னவென்று எனக்கோ அல்லது என் நிலை என்னவென்று குடும்பத்துக்கோ தெரியாது.

"இந்தக் காலப்பகுதியில் என்னைபோன்ற பலரை களுத்துறை சிறைச்சாலைக்குக் கொண்டு சென்றுவிட்டனர். அங்கு, வன்னியில் புதைக்கப்பட்ட வெடிபொருட்கள் தொடர்பான கேள்விகளால் துளைத்தெடுக்கப்பட்டேன். கேள்விகள் என்றால் பரவாயில்லை, துளைக்தெடுக்கப் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களால் ஏற்பட்ட ரணம் கொடூரமானது.

"இதற்கிடையில், யுத்தத்தில் வாங்கிய விழுப்புண்கள் மரண வேதனையை கொடுக்கும். ஈரல் பகுதிக்கு பக்கத்தில் ஒரு துண்டு சன்னம் உள்ளது. அதனை அகற்ற முடியாது என்று இப்போதும் வைத்தியர்கள் சொல்கிறார்கள். இன்றைக்கும் அச்சன்னம் அவ்வப்போது உள்ளே உரசி உயிரை பிய்த்தெறியும் வலியைக்கொடுக்கும். இப்போதே இவ்வளவு வலியென்றால், அன்று எப்படி இருந்திருக்கும் என்று எண்ணிப்பாருங்கள்.

"இந்த சித்திரவதைக்குள் அம்மா தம்பிமார்களுக்கு என்ன நடந்ததோ என்ற சிந்தனை ஒருபக்கம் வாட்டி வதைத்தது. ஒருநாள் நீதி மன்றம் அழைத்து செல்லும்போது கனடாவில் இருக்கும் உறவினருக்கு தொடர்பு எடுக்க வாய்ப்பு கிடைத்தது. அவரைத் தொடர்புகொண்டு அம்மா குறித்து கேட்டேன். அவர்கள் ஊடாகத்தான், எனக்கு அம்மாக்கும் இடையிலான தொடர்பு மீண்டும் கிடைத்தது.

"இதற்கிடையில், 'முன்னாள் போராளிகளை விடுவித்துத் தருகிறோம்' - என்று பெயர் பலகை போடுமளவுக்கு 'தரகர்கள்' நிறைந்து போயிருந்தனர். அப்படி ஒரு தரகரின் ஊடக பணத்தை போட்டு உயிரை மீட்டு, புத்தளம் வந்தோம். வந்து ஒரு கிழமையில் ஆஸ்திரேலியாவுக்கான படகில் ஏறினேன்.

"உண்மையில் உயிரை காப்பாற்ற நினைப்பவன் 'பாஸ்போட்' எடுத்து ஏஜன்டைப் பிடித்து வரயோசிக்க நேரமிருக்காது. உடனடியாகத் தப்பிக்க என்ன வழி என்றுதான் தேடுவான். அது ஆஸ்திரேலியாவா, அந்தாட்டிக்காவா என்பது அடுத்த கட்டம். இது முதல் புரியவைக்கவேண்டும். அதுமட்டுமல்ல, முன்னாள் போராளி என்று எமது தமிழ் ஆட்களிடம் சொல்லவே பயமா இருக்கிறது. 'ஏன் இயக்கத்துக்கு போனியள்' என்று கேட்டுக்கொண்டே, பதிலையும் கேள்வியாக 'என்ன லவ் பெயிலியரா' - என்று கேட்பார்கள்.

"ஒரு காலம் நாங்கள் கம்பீரமாக 'போராளி' என்று எங்களை சொன்னோம். இப்போது 'போராளியாக இருந்தேன்' என்று சொல்லும்போதே பலரிடமிருந்து ஏளனப்பார்வைதான் தெரிக்கிறது"

என்று தன் உள்ளக்குமுறல்களை வெளிப்படுத்திய அவர், "அந்த விடயத்தை விடுவோம்" -எனக் குறிப்பிட்டு, அடுத்த அத்தியாயத்துக்குள் நுழைந்தார்.

"நான் ஆஸ்திரேலியா வந்த பின்னர், அம்மா எனது மூன்று தம்பிகளையும் கூட்டிக்கொண்டு தமிழ்நாட்டுக்கு வந்துவிட்டார். நான் இங்கு ஆஸ்திரேலிய அகதிகள் தடுப்பு சிறையில் பதினொரு மாதங்கள் இருந்து விடுவிக்கப்பட்டுவிட்டேன். இந்தக் காலப்பகுதியில் தமிழ் நாட்டில் நடந்த வாகன விபத்தில் எனது தம்பி ஒருவரும் இறந்துவிட்டார். தொடர் சாவுகளால் அம்மாவும் உளரீதியில் பாதிக்கப்பட்டார். எப்படி அவருக்கு ஆறுதல் கூறுவது?

"எனக்கும் எவ்வளவோ வலி - வேதனை. நெடுநாட்களாக உடலில் சுமந்த ரணங்களின் மத்தியில் ஒருவாறு இந்த நாட்டில் அகதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டேன். ஆனாலும் உறவுகளுடன் இணைவதற்கான கதவு இன்றுவரை மூடப்பட்டடே கிடக்கிறது.

"யுத்த வலிகளையும் தாண்டி, ஆஸ்திரேலியாவில் அநாதைகளாக அலைந்து கொண்டிருக்கும் என் போன்ற அகதிகளின் வலி மிகவும் கொடியது" - என்று மிகுந்த விரக்தியுடன் அவரது உரையாடல் முடிந்தது.

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI
ஏப்ரல் 2021

# ஊசிவரை உறவு

கனடாவிலிருந்து மூர்த்தி





தமிழ் வருடப்பிறப்பாக பிலவ ஆண்டு பிறந்தது! மருத்துநீர் வைத்து நீராடிய பின்னர் கோயிலுக்கு சென்று வழிபட ரொறன்ரோ நகரில் வாழும் நம்மவர்கள் பலரும் ஆசைப் பட்டாலும், கொரோனா வைரஸ் அதற்கு பெரிதாக அனுமதி தரவில்லை. கனடாவில் கோவிட்-19 பரவல் தனது மூன்றாவது அலையைப் பரப்பி, புதிய தாக்குதலை முடுக்கியிருக்கும் காரணத்தால், ஒன்ராறியோ மாகாண அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுத்து, பல நகரங்களை முடக்கி வைத்திருக்கிறது.

ஒன்ராறியோ மாகாணத்தினர் மற்ற மாகாணங்களுக்கு பயணம் செய்வது தடை செய்யப்படுகிறது (தமிழர்கள் வாழும் மொன்றியால் நகரிருக்கும் கியூபெக் மாகாணம் உட்பட) மக்கள் தமது வீடுகளுக்குள் இருக்குமாறு கோரும் உத்தரவு நீடிக்கப்படுகிறது. மக்கள் பொது இடங்களில் கூடுவது மட்டுப்படுத்தப்படுகிறது. திறக்க அனுமதிக்கப்பட்டிருக்கும் பெரிய கடைகளிலும் 25 வீத வகையான பொருட்களுக்கே விற்பனை அனுமதி. கோயில்கள் ஆராதனைகள், திருமணங்கள், மரணச் சடங்குகள் நடக்கும்போது 10 பேருக்கே உள்ளேயிருக்க அனுமதி, கட்டுமானத்துறையினருக்கும் புதிய கட்டுப்பாடு என ஒன்ராறியோ அரசு எதிர்கொள்கிறது.

இந்தக் கட்டுரை எழுதப்பட்டுக் கொண்டிருக்கும் நேரத்தில், தினசரி கோவிட் பாதிப்படைவோரின் எண்ணிக்கை, ஒன்ராறியோ மாகாணத்தில் மட்டும் 4,736 என்ற இலக்கத்தைத் தொட்டுக் கொண்டிருக்கிறது. இந்த நிலை நீடித்தால், மே மாதம் முடிவடையும் காலகட்டத்தில், ஒன்ராறியோ மாகாணத்தில் தினசரி பாதிப்பு எண்ணிக்கை 18,000 என்ற நிலை வரும் என அரசாங்கம் திகிலை கிளப்பியுள்ளது. இது இன்றைய பாதிப்பைவிட 4 மடங்கு அதிகமாகும். இறப்பு விகிதமும் அப்படியே அதிகரிக்கலாம் என்றும் கணிப்புகள் மிரட்டுகின்றன.

கனடா அரசாங்கம் தடுப்பூசி போடுவதை துரிதப்படுத்தி வருகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட மருந்துவமனைகள், பார்மஸிகள், சமூக மன்றங்கள், விசேட அலுவலகங்கள் ஆகியவற்றில் வைத்து - போர்க்கால அடிப்படையில் நடப்பதுபோல - தடுப்பூசிகள் தரப்படுகின்றன. ரொறன்ரோ பெருநகர் மற்றும் அதை அண்டிய பகுதிகளில் வாழும் நமது தமிழ் மக்களும் எப்படியாவது தமக்கான தடுப்பூசியைப் பெற்றுவிட வேண்டும் என முன்நிற்கிறார்கள். Moderna, Pfizer-BioNTech, AstraZeneca, Johnson & Johnson ஆகிய நான்கு கோவிட்-19 தடுப்பு மருந்துகள் இதுவரை கனடிய அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டவையாக இருக்கின்றன.

இன்றைய நிலையில், கனடாவின் முழு சனத் தொகையில் 2.2 விகிதத்தினர் மட்டுமே கொரோனா தடுப்பூசியை எடுத்திருக்கிறார்கள் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. ஏப்ரல் மாதம் முடிவதற்குள் 15 மில்லியன் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டு விடவேண்டும். கனடாவின் முழு ஜனத்தொகை 38 மில்லியனாகும். (உங்கள் அவுஸ்ரேலியாவின் ஜனத் தொகை சுமார் 26 மில்லியன்தான் என் பதை மறக்க வேண்டாம்.)



அனைத்து மக்களுக்கும் இவ்வருட முடிவுக்குள் தடுப்பூசி தரப்பட்டுவிட முடியும் என்ற நம்பிக்கையில் இயங்கி வந்த கனடிய அரசாங்கம், சமீப காலமாக சில பல பின்னடைவுகளையும் சந்திக்கிறது. இதற்கு தடுப்பூசிகள் குறித்து மக்களிடையே ஏற்பட்டிருக்கும் சந்தேகங்களும், விநியோக முறைமையில் எதிர்பாராமல் ஏற்பட்டுவரும் சிக்கல்களும் காரணமாகும்.

இதற்கிடையே AstraZeneca தடுப்பூசிகளை பெற்றவர்களுக்கு சில பக்க விளைவுகள் ஏற்பட்டு வருவதாக கிளம்பியுள்ள முரண்நிலை, பொதுமக்களிடையே பீதியைக் கிளப்புவதையும் காணக்கூடியதாக உள்ளது. இந்தப் பீதி நமது தமிழ் மக்களைப் பற்றிக் கொள்ளாமலும் இல்லை. இதன் காரணமாக, தடுப்பூசி போடும் தமது எண்ணத்தை பல தமிழ்க் குடும்பங்கள் பிற்போட்டு வருகின்றன என்றும் தமிழர்களோடு பணியாற்றும் சுகாதார சேவையாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

ஆக, “இன்றைக்கு செத்தால் நாளைக்குப் பால்” என்று காலம் சென்ற நடிகர் விவேக் சொன்னதுபோல, வாழ்க்கை நம்மவரில் பலருக்கும் ஒரு மர்மத் திரைப்படம் போல - கிளைமாக்ஸ் எப்போது வரும் என்று தெரியாத நிலையில் - ஓடிக்கொண்டிருக்கிறது. அப்படி ஓடும்போது, காமடி ட்ராக்கும் வரும்தானே, அந்தவகையில் தடுப்பூசி பெறுவது குறித்த பல்வேறான கற்பனை நகைச் சுவைத் துணுக்குகளும் நம்மிடையே பகிரப்படுகின்றன. அவற்றில் ஒன்று, தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்கள் அது குறித்தும், பக்க விளைவுகள் குறித்தும் ஊசியை போட்ட மருத்துவரிடம் கேள்விகள் எழுப்புவது. அப்படி பல இனத்தவரும் பலவிதமான கேள்விகளை கேட்க, எங்கட தமிழ் ஆண்கள் எல்லோருமே ஒரு கேள்வியை மட்டும்தான் கேட்கிறார்களாம் “இண்டைக்கு இரவு தண்ணி அடிக்கலாமே டொக்டர்..?”

இவ்வகையாக குசும்புகள் ஒருபுறமிருக்க, திருமணக் கொண்டாட்டங்களும் நடக்கின்றன. மணமக்களைத் தவிர அனைவரும் மற்றவர்கள் முகக்கவசத்துடன் சிரித்துக்(?) கொண்டிருக்கும் திருமணப்புகைப்படங்கள் சர்வ சாதாரணமாகி வருகின்றன. தமிழர்களின் திருமண மண்டபங்களில் கோவிட் கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதால், சில திருமணங்கள் புதிய பாணியில் நடத்தப்படுகிறது. அதாவது, திருமண மண்டபத்துக்குள் குறைந்த அளவிற்கே வருகையாளர்கள் இருக்கவேண்டுமென்பதால், மொய்ப்பணம் கொண்டு வந்திருந்தாலும் சிறு சிறு தொகையினராகவே வந்தவர்கள் உள்ளே போக அனுமதிக்கப்படுகிறார்கள். இதனால் திருமண மண்டபத்துக்கு வெளியே வாகனத்தரிப்பிடங்களில் பெரிய வுஏ ளுஉசநநெ வைக்கப்பட்டு, விருந்துக்கு வந்தவர்கள் கார்களின் உள்ளேயே உட்கார்ந்த நிலையில் திருமணத்தைப் பார்க்கவும் வசதிகள் தற்போது செய்யப்படுகின்றன. னுசளைந-டை சநளவயரசயவெ போல, கல்யாணச் சாப்பாட்டை காருக்கே கொண்டு வந்தும் தருகிறார்களாம். ஆக, மொய் வைத்தவர்கள் முழுமையாக நட்டமடையாமல், வாகனத்தரிப்பிடத்திலிருந்து சாவகாசமாக திருமண உணவை புசித்துவிட்டுப் போகலாம்.


ஒரு விருந்து மண்டபத்தில் கட்டுப்பாட்டு விதிகளை மீறிய நிலையில் ‘உற்சாகமாக” நம்மவர்கள் கொண்டாடிக் கொண்டு இருந்தபோது Facebook Live விலும் தமது கொண்டாட்டங்களை ஒளிபரப்பியிருக்கிறார்கள். யாரோ “மொட்டைக் கடுதாசி” போடும் புண்ணியவான், அந்த ive video வை மொட்டை வீடியோவாக போலிசுக்கு அனுப்பி வைக்க... தமிழேண்டா!

‘லொக் - டவுன்’ காரணமாக வீட்டில் அடைபட்டிருக்க நேர்ந்திருப்பதால், பலரும் தற்போது தமது வீடுகளைத் திருத்துகிறார்கள். பெயின்ற் அடிக்கிறார்கள். தோட்டம் செய்கிறார்கள். ஒருவருக்கொருவர் உதவிடும் மனப்பக்குவம் அதிகரித்தும் வருகிறது.

கனடியர்களுக்கு ஜஸ்ரின் ட்ரூடோவின் அரசாங்கம் நிவாரண நிதி உதவிகள், கட்டண விலக்குகள், கடன் அளித்தல்கள் என ஏராளமான உதவிகளைச் செய்து வருகிறது. இதன் காரணமாக, பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோவிற்கு நாடளாவிய அளவில் செல்வாக்கு அதிகரித்தும் இருக்கிறது. தற்போது சிறுபான்மை அரசாக இருக்கும் ஜஸ்ரின் ட்ரூடோவின் அரசாங்கம் வெகு விரைவிலேயே ஒரு தேர்தலை நடத்தவும் நினைக்கிறது. அதற்குத் தயாராகுமாறு, அரச இயந்திரங்களுக்கான கட்டளைகள் பிறப்பிக்கப்படுவதையும் சில ஊடகங்கள் சூசகமாகத் தெரிவிக்கின்றன. இதைப் புரிந்து கொண்ட சில தமிழ் அரசியல் ஆர்வலர்களும் விரைவில் வரவிருக்கும் அடுத்த தேர்தலை மனதில் வைத்து சில காரியங்களை ஆரம்பித்து நடத்தி வருவதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

நான் கோவிட் தடுப்பூசி போடுவதற்காகப் பதிந்திருந்தேன். ஒரு மாதத்தின் பின்னர்தான் எனக்கு திகதி ஒதுக்கப்பட்டது. ஆனால் “காத்திருந்து ஊசி போடுபவர்களின் Walk in வரிசையில் போய் நின்று பார், உடனே போட்டுவிடலாம்” - என ஆலோசனை கிட்ட, மறுநாளே பல்லின மக்களோடு இணைந்து வரிசையில் நின்று பார்த்தேன். அந்த அனுபவமே தனி. மரண பயம் இணைத்திருந்ததால் ‘ஊசிவரை உறவு” என்பதுபோல ஆண், பெண் வித்தியாசமின்றி நட்பார்ந்த உரையாடல்கள் தொடரக் காத்திருந்தோம். முகக்கவசம் அணிந்திருப்பதால் பல பெண்கள் அழகாகத் தென்பட்டார்கள். ஏராளமான தமிழர்களும் வரிசையில் நின்றார்கள். எனக்கு முன்னாலும் (“உந்தக் கார் லீசுக்கு எடுத்தீங்களா..”) பின்னாலும் (“சம்பந்தன் மட்டுமில்ல.. சுமந்திரன்.. சாணக்கியன்...”) பலத்த குரலில் முக்ககவசத்தினூடாக தமிழில் உரையாடுபவர்களோடு கலந்து நின்று, தடுப்பூசி எடுக்கும் அந்த வரலாற்றுக் கடமையை முடித்துக் கொண்டேன்.

இங்ஙனமாக தமிழ்க் கனடியர்களான நாம், நமக்கே உரிய முறையில் இந்த சிக்கலான கோவிட் காலப்பகுதியை கடந்து வருகிறோம். நாங்க ஊசி போடுறம். நீங்க..?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாநகர மேயர் மணிவண்ணன் நடுச்சாமத்தில் கைதுசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக praja.lk என்ற சிங்கள இணையத்தில் வந்த இக்கட்டுரையை ரிஷான் ஷெரீப் மொழிபெயர்த்துள்ளார். praja.lk இணையத்தை நடத்துகின்ற 'பெரா' என்றழைக்கப்படும் அஜித் பெரகும் ஜயசிங்ஹ ஒரு எழுத்தாளர், வலைப்பதிவாளர், சமூக செயற்பாட்டாளர், ஆசிரியர் என பன்முகம் கொண்டவர். சமூகத்தில் நாம் அனுபவித்திராத, அனுபவிக்க விரும்பாத அனுபவங்கள் பலவற்றைக் கொண்டவர் அவர்.

அஜித் பெரகும் ஜயசிங்ஹ ஒரு காலத்தில், எளியகந்த சித்திரவதை முகாமில் கைதியாக இருந்தவர். அவர் எளியகந்த வதைமுகாமில் ஒரு வருடமும், ஒரு மாதமும், ஒரு நாளும் சிறைப்படுத்தப்பட்டிருந்தார். இதைத்தவிர அவர் வேறு பல சித்திரவதை முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டவர். அம்முகாம்களிலும் அவர் மிகவும் பயங்கரமான விடயங்களுக்கு முகம் கொடுத்துள்ளார்.

ஹெட்டியாவல சித்திரவதை முகாமிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்த அஜித், அம்முகாமிலிருந்த ஒரு சார்ஜனைக் குறித்து இவ்வாறு குறிப்பிடுகிறார். அந்த சார்ஜன், பாடல்களைக் கேட்கும்போது நடனமாடுவார். ஆனால், மிகத் திறமையாக கத்தியால் கைதிகளின் கழுத்தை அறுத்துக் கொல்லுவார். ஒருதடவை எளியகந்தையில் வைத்து புதிய இராணுவ வீரனொருவன், கைதிகள் இருவரைத் தாக்கி, மண்வெட்டியால் தலைகளைக் கழுத்திலிருந்து வேறாக்கி, ஒரு தலையை வேலியின் மறுபக்கம் வீசி எறிந்து விட்டு, அஜித்திடம் அதனைத் தேடி எடுத்துக் கொண்டு வரும்படி பணித்திருக்கிறான். இந்த இராணுவ வீரன் ஹொரணை பிரதேசத்தைச் சேர்ந்த பத்தொன்பது வயது இளைஞன்.

எளியகந்த சித்திரவதை முகாமானது, இலங்கை இராணுவத்தின் பொறுப்பிலேயே இருந்தது. அஜித் எளியகந்த வதைமுகாமிலிருந்த ஆரம்பகாலத்தில், அம்முகாமுக்குப் பொறுப்பாக இருந்த நானகாவது பீரங்கிப் படைப் பிரிவின் தளபதி, பின்னொரு காலத்தில் சிரேஷ்ட பதவிக்கு தரமுயர்த்தப்பட்டதை அவர் நினைவுகூர்கிறார். அவர்தான் அஜித்தின் உயிரைக் காப்பாற்ற நடவடிக்கை எடுத்தவர்.

தான் இலங்கை இராணுவத்தினால் கைது செய்யப்படுவதற்கும் சித்திரவதை முகாமில் அடைக்கப்பட்டதற்குமான காரணங்களை அஜித் கூறும்போது –

"1984 ஆம் ஆண்டளவில் நான் ஜே.வி.பியில் இருந்தேன். மிக விரைவாகவே, அப்போது நான் படித்துக்கொண்டிருந்த சிறப்புப் பொறியியல் அடிப்படைப் பாடநெறி வகுப்புக்களைத் தவிர்த்துவிட்டு அரசியலில் அதிகமாக ஈடுபட்டேன். ஜே.வி.பி. பத்திரிகைகளை விநியோகித்துக்கொண்டிருந்தது சம்பந்தமாகக் கைதுசெய்யப்பட்டு, அவசர காலச் சட்டத்தின் கீழ், மூன்று மாதங்கள் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்து விடுதலையானதன் பின்னர், ஜே.வி.பி. இயக்க அரசியலில் நிரந்தரமாக இணைந்து செயல்பட்டேன். அது 1986 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில். அதற்குப் பிறகு ஜே.வி.பி. மாணவர் பிரிவிலும், அரசியல் பிரிவிலும் கடமையாற்றினேன். இறுதியாக மாத்தறை மாவட்டத்தின் பிரச்சாரக் காரியதரிசியாகவும், வலயக் காரியதரிசியாகவும் வேலை செய்தேன்" – என்கிறார்.

இனி அவரது தளத்தில் வெளிவந்த மணிவண்ணன் கைது குறித்த கட்டுரையைப் பார்ப்போம் –

யாழ்ப்பாண மாநகர சபையினால் காவல் பிரிவு நியமிக்கப்பட்டமை, அதற்காக அக் காவல் பிரிவை நியமித்த யாழ்.மா நகர முதல்வர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை ஆகியவை மிகவும் முக்கியமான அரசியல் நிகழ்வுகளாக கருதப்பட வேண்டியவை.

இந்தக் காவல் பிரிவின் சீருடையானது தமிழீழ விடுதலைப் புலிகளின் பொலிஸ் சீருடையை நினைவுபடுத்தும் விதத்தில் இருப்பதாக சிலர் கூறுவதால்தான், இந்த 'காவல் பிரிவு' பொலிஸ் என்று கருதப்படுகிறது. பொதுவாக நகர சபைகளால் நியமிக்கப்படும் வாகனத் தரிப்பிட பரிசோதகர்களின் சீருடைகளை விடவும் இவை வேறு பட்டவை அல்ல. விடுதலைப் புலி பொலிஸைப் போல இவர்கள் ஆயுதம் தாங்கியவர்களும் அல்லர்.

இலங்கை அரசமைப்புச் சட்டத்தின் பதின்மூன்றாவது திருத்தத்துக்கு ஏற்பவே, வடக்கு மாநகர சபைக்கு பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட்டன. அந்த அதிகாரங்கள் பயன்படுத்தப்படுவதை மத்திய அரசாங்கம், அரசியலமைப்புக்கு எதிரான விதத்தில் தடுத்துள்ளது. அதிகாரப் பகிர்வில், மாகாண சபையைவிட உள்ளூராட்சிக்கு அதிகாரத்தை வழங்குவது ஜனநாயகபூர்வமானது. யாழ்ப்பாணக் காவல்துறையின் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட இந்தக் காவல்பிரிவு, இந்தப் பிரச்சினையில் கவனம் செலுத்த ஒரு சிறந்த ஊக்கக் கருவியாக அமைந்துள்ளது.

இலங்கை காவல்துறையின் கிட்டத்தட்ட 80,000 பணியாளர்களில் பாதிப் பேர் பிரபுக்களைப் பாதுகாக்கும் வேலையையே செய்து வருகிறார்கள். மக்களைப் பாதுகாக்க எந்தப் பொலிஸ் அதிகாரியும் இல்லை. இது பொருளாதாரத்தை எவ்வாறு பாதிக்கிறது என்பதை சமீபத்திய விவாதத்தில் ஒருவர் கூறினார். கொள்ளைகளால் ஏற்படும் சேதங்களின் காரணமாக இறப்பர் உற்பத்தியாளர்கள், சிறந்த இறப்பர் ஷீட்களை உற்பத்தி செய்யத் தூண்டப்படுவதில்லை என்று அந்த நபர் குறிப்பிட்டுள்ளார். பொது மக்களின் பணத்திலிருந்து ஊதியம் பெறும் பொலிஸ் காவல்துறைக்கு, பொதுச் சொத்துக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு இருப்பதை இன்று காவல்துறையும், காவல்துறையினருக்கு சம்பளம் வழங்கும் பொது மக்களும் மறந்து விட்டார்கள்.

மக்களின் பாதுகாப்புக்குக் கேடான விதத்தில் பொது இடங்களில் துப்புதல், சட்டவிரோதமாகக் குப்பைகளை இடுதல், சட்டவிரோதமாக வாகனங்களை நிறுத்தி வைத்தல் போன்ற செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த மாநகர சபை இது போன்ற காவல் பிரிவை அமைப்பதில் எவ்விதத் தவறும் இல்லை. அதற்குக் காண்பிக்கப்பட்டுள்ள ஆதாரமற்ற எதிர்ப்புகள், கடைசியில் பொலிஸ் அதிகாரங்கள் குறித்து ஒரு கேள்வி உருவாகவே வழிவகுத்துள்ளன.

மாகாண சபைகளை எதிர்ப்பவர்கள், அதிகாரப் பகிர்வானது மாகாண சபைகளைக் கடந்து உள்ளூராட்சி அமைப்புகள்வரை செல்லவேண்டும் என்று கூறுகிறார்கள். நகராட்சி சொத்துக்கள் மற்றும் சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்கும், வாகனங்களை முறையாக நிறுத்தி வைப்பதற்கும், நகர்ப்புற வீதி ஒழுங்குகளைப் பேணுவதற்கும் உள்ளூராட்சி அதிகாரிகளின் அதிகாரங்களைப் பயன்படுத்துவதில் இத்தகைய காவல் பிரிவு மிகவும் பயனுள்ளதாக அமையும்.

தற்காலத்தில் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்களாக இருப்பவர்கள் புத்திஜீவிகள் அல்ல. தேசிய அரசியல்வாதிகளை வற்புறுத்தி, அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டுள்ள குண்டர்கள். அத்துடன், கொள்ளையர்களிடத்தில் பொலிஸ் காவல்துறையை ஒப்படைப்பது என்பது நரிகளின் பொறுப்பில் கோழிகளை விடுவதை ஒத்தது. எனினும், ஒரு நாட்டில் அரச சீர்திருத்தங்களை முன்வைக்கும்போது நாம் வருங்காலத்தைக் குறித்தும் சிந்திக்க வேண்டும். தற்காலத்தில் இருக்கும் உள்ளூராட்சித் தலைவர்களின் குழுவே எப்போதும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்குள் இருப்பது கூடாது.



தமிழில் எதிரொலிக்காக
எம்.ரிஷான் ஷெரீப்

# சிறிலங்கா சித்திரவதை முகாமிலிருந்து மீண்டவர் தளத்தில் வந்த முக்கிய பதிவு

யாழ் மாநகர சபை முதல்வர் வி. மணிவண்ணன் ஒரு சட்டத்தரணி. அவரது புகைப்படத்தைப் பாருங்கள். இலங்கையின் பெரும்பாலான சிங்களப் பகுதிகளில், உள்ளூராட்சிநிறுவனங்களின்தலைவர்களாகஇருப்பவர்களை விடவும் அதிக மனிதாபிமானமுள்ளவராக அவர் தோற்றமளிக்கிறார் என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். தமிழீழவிடுதலைப்புலிகளின்பொலிஸ்சீருடையை விளம்பரப்படுத்துவதாக யாரோ ஒரு முட்டாள்களின் கோள்மூட்டலுக்கு செவி சாய்த்தே அவரைக் கைது செய்திருப்பதாகத் தெரிகிறது. தெற்கில் ஒரு சிங்களப் பகுதியில் ஒரு மாநகர சபையால் பணியமர்த்தப்பட்டுள்ள பாதுகாப்புக் காவலரின் சீருடையின் புகைப்படமும், அந்த 'புலி காவல்துறை" சீருடையின் புகைப்படமும் ஒப்பிட்டுப் பார்ப்பதற்காக இத்துடன் தரப்பட்டுள்ளன.

இறுதியாக இதையும் கூற வேண்டும். இலங்கை பொலிஸ் காவல்துறை தற்போது அணிந்து கொண்டிருக்கும், எமது நாட்டுக்குப் பொருத்தமற்ற காக்கி சீருடை தொடர்பாக சமூகத்தில் காணப்படும் எதிர்மறையான அணுகுமுறைகளை அகற்ற இலங்கை பொலிஸ் காவல்துறைக்கு இவ்வாறான சீருடையை அறிமுகப்படுத்த வேண்டும். விடுதலைப்புலிகள் பயன்படுத்தும் நிறங்களுக்குக்கூட பயந்து கொண்டிருந்தது என்பது காலம் கடந்த ஒரு விடயம்.

ஒரு தொடக்கமாக, சுயாதீனமான உள்ளூராட்சி பொலிஸ் காவல்துறைக்குப் பதிலாக, பொலிஸ் காவல்துறையின் கீழ் உள்ளூராட்சி காவல் பிரிவுகளை நிறுவ முடியும். இது, உள்ளூராட்சி நிறுவனத்தின் பொலிஸ் அதிகாரங்களை செயற்படுத்தவும் உதவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழிக்காலம்-2

21



# புயலுக்குப்பின்...



முன்னதாக அழைத்துச் செல்லப்பட்ட பெண் மீண்டும் கொண்டு வந்து விடப்பட்டிருந்தாள். ஆயினும், அவள் யாருடனும் முன்னர் போலப் பேசவில்லை. எதையோ பறி கொடுத்தவள் போலக் காணப்பட்டாள். அழகான அவள் முகம் வாடிப் போயிருந்தது. அவளருகில் இருந்த பெண்களே அவளுக்கான உணவு, தண்ணீர் என்பவற்றை எடுத்துக் கொடுத்தனர். மேலும் இரு தினங்களில் மற்றப்பெண்ணையும் கொண்டுவந்து விட்டனர்.

அவள் பகல் முழுதும் படுத்தேயிருந்தாள். யாருடனும் தொடர்புகொள்ளவில்லை. ஒரு பெண் பார்வதியிடம் வந்து, “மம்மி மதியக்கா உங்களோட தனியக் கதைக்கப் போறாவாம். உங்களுக்கு நேரமிருக்கோ எண்டு கேக்கச் சொன்னவ” - என்றாள்.

“காலையில நான் தியானம் முடிச்ச பிறகு வரலாம் எண்டு சொல்” - என்றாள் பார்வதி. பார்வதி விடாப்பிடியாக - அதிகாலையில் - எல்லோருடையதும் தூக்கம் கலையுமுன் எழுந்து தியானம் செய்வதையும் வெள்ளிக்கிழமைகளில் பஜனை செய்வதையும் வழக்கமாக கொண்டிருந்தாள்.

பதினைந்து பேர்வரை தொடர்ச்சியாக பஜனைக்கு வந்தனர். இதற்குமுன் ‘சாயி-சேவா சமிர்த்தி’ யினர் வந்து இவர்களுக்காக ஒரு அகண்ட நாம பஜனையை செய்திருந்தார்கள்.

அந்த முகாமின் அலுவலகத்துக்கு, புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு பொறுப்பாளரான - முன்னர் உரையாற்றிச் சென்ற - ஜெனரல் தயா ரட்ணாயக்க வந்திருந்தார். முகாமில் நிற்கும் எவருக்கும் இது தெரியாது. இரண்டு இராணுவப் பெண்கள் “பீ” புளொக்கில் வந்து பார்வதியைத் தேடினார்கள்.

பார்வதி ஏதோ படித்துக்கொண்டிருந்தவள் வெளியே வந்து “என்ன” என்று கேட்டாள்.

“அம்மா, உங்கள ஒவீசுக்கு கூட்டிவரச் சொன்னாங்க” - என்றாள் ஒரு பெண். பார்வதி அப்படியே புறப்பட - “இல்லம்மா - இப்பிடி வேண்டாம், நல்ல துணி உடுத்துங்க” - என்றார்கள்.

பார்வதி தன்னிடமிருந்த சேலையை அணிந்துகொண்டு அவர்களுடன் புறப்பட்டாள்.

முதல் முதலாக அந்த ஒவீசுக்குள் நுழையும் பதற்றம் அவளுக்கு. ‘ஏன் என்னைக் கூப்பிட்டனுப்பி இருக்கிறார்கள்? ஒரு வேளை புலனாய்வாளர்கள் ஏதும்’ - யோசித்தபடி வாசலை நெருங்க -

“வாங்க” என்று அவளை அழைத்தவள் அந்த முகாமின் பொறுப்பாளர் கப்டன் லக்மாலிதான். அப்படியே உள்ளே திரும்பி மெதுவாக, “அம்மா” என்றாள். உள்ளே சாதாரண கதிரையொன்றில் அமர்ந்து, கோப்புக்களை ஆராய்ந்து கொண்டிருந்தது வேறுயாருமல்ல, அதிகாரி தயா ரட்ணாயக்கவேதான். பார்வதியை நிமிர்ந்து பார்த்து -

“வாங்க.... நலமாயிருக்கிறீங்களா”

“ஆம் நலம்தான்” - என்றாள் பார்வதி.

“நான் பேசும் சிங்களம் உங்களுக்கு விளங்குமா”

“ஆம், புரிந்து கொள்ள முடியும்” - என்றபோதும் அவர் ஒரு மொழிபெயர்ப்பாளரை அருகில் வைத்துக் கொண்டான்.

“பிள்ளைகள் என்ன பேசிக்கொள்கிறார்கள்.”

“எப்போது குடும்பத்தினருடன் சேருவோம் என ஏக்கத்தோடு இருக்கிறார்கள்”

“நேற்று அந்த மொழிபெயர்ப்பில ஏதோ பிரச்சனை இருந்தது இல்லையா?”

“ஆம், அதை அவர் அடுத்துப் பேசும் போது திருத்திக் கூறிவிட்டாரே”

“எது...அந்த ஐந்து வருடம்மென்ற விடயந்தானே?”

“அதேதான், திரும்பவும் அதை திருத்திவிட்டார்”

“அம்மா சொந்த இடம் எது?”

“வவுனியா..”

“ஏன் அங்கால போனது..?”

“இயக்க மோதல்களால..”

“என்ன வேலை இயக்கத்தில செய்தனீங்க.”

“மீடியா, ரேடியோ, பேப்பர், ரீவீல கலை கலாச்சார நிகழ்ச்சிகள்”

“செய்தி சொல்லப் போறதில்லையா?’

“இல்லை அதுக்கு தனிப்பிரிவு அவங்களோட எங்களுக்கு தொடர்பில்லை”

“தலைவரைக் கண்டிருக்கா...?”

“பல தடவை பார்த்திருக்கிறன்”

“கடைசியா எப்ப பார்த்தது”

“ம்... ஜனவரி மாசம்..” (பொய்)

“நல்ல மாதிரியா உங்களுக்கு”

“நிச்சயமா எனக்கு பல பரிசுகள் தந்திருக்கிறார்” (நான் மறைச்சாலும் வேற யாரும் போட்டுக்குடுத்திருவாங்க)

“ம்! முடிஞ்ச கதை வேணாம். பிள்ளைகளை போர்க்குணத்தை விடச் சொல்லுங்க, அவங்களோட பேசுங்க. நல்லமாதிரி நடந்தா, சீக்கிரமா வீட்டுக்குப் போகலாம் என்று சொல்லுங்க”

“சரி”

“தொழில் பயிற்சி குடுக்க ஏற்பாடு நடக்குது. மெசினறீஸ் வரவேணும். ஒரு மாதத்தில பயிற்சி தொடங்குவம்.”

“நன்றி”

“சரிம்மா போயிட்டு வாங்க..”

அவள் திரும்பினாள். முகாம் வாசலிலேயே கேள்விகள் நின்றன,

“என்னவாம்”

“ஆர்...வந்தது?”

“ஆர் கூப்பிட்டது?”

எல்லாவற்றுக்கும் ஒரே பதில்தான்.

“எல்லாரையும் சண்டை சச்சரவு இல்லாம இருக்கட்டாம். ஒற்றுமையா இருக்கட்டாம், கெதியா விடுவினமாம், ஒரு மாதத்தால தொழில் பயிற்சியாம், மெசினுகள் வருதாம்”

“ம்... ஆரெட்டயோ காசு அடிக்க திட்டம் போட்டிட்டாங்கள். எங்களைக் காட்டித்தானே அவங்கள் காசு பறிக்கிறது”

“எல்லாம் சும்மா, அக்கறை இருக்கிற மாதிரி ஒரு நடிப்பு. நாங்களென்ன பேய்க் கூட்டமெண்டு நினைச்சிட்டாங்களே”

“உந்த குணத்தை முதல்ல விடுங்கோ. நடத்தையப் பொறுத்துத்தான் விடுதலையாம்” - பார்வதி கூறினாள்.

அன்றிலிருந்து நான்காம் நாள், ஒரு அழகிய வாகனத்தில், அழகிய பெண்ணுடனும் மேலும் இருவருடனும் வந்திறங்கிய தயா ரட்ணாயக்க, “பீ” புளொக்கை நோக்கிவர, பார்வதி வாசலுக்கு நேராக உள்ள கன்ரீனில் பொருட்கள் வாங்க வந்து நின்றாள்.

“ஆ... அம்மா நலமா..?” - என்று சிங்களத்தில் கேட்டவர் - “நான் சொன்னனில்ல, அந்த வேலைத்திட்டத்தை நடத்தப் போறவங்க இவங்கதான்” - என்று அந்த அழகிய பெண்ணை அறிமுகப்படுத்தினார். அந்த வளவைச் சுற்றிப்பார்த்த அந்தப்பெண், “எங்க இவங்கட கோயில்” என்று கேட்டாள்.

அதிகாரி ரட்ணாயக்க, கப்டன் லக்மாலியைப் பார்க்க, அவள் “இல்லை கோயிலொன்றும் வைக்கவில்லை” - என்றாள்.

“அப்போ எப்படி அவர்களுக்கு அமைதி கிடைக்கும். ப்ளீஸ் உடனே வழிபாட்டுக்கு ஏற்பாடு செய்யுங்க” - என்றவளின் முகம் சுருங்கிப்போனது. கட்டடத்தையும் பெண்கள் செறிவாகத் திரிவதையும் பார்த்தவள், “மண்டபம் போதுமா? எல்லோரும் தூங்க” - என்று கேட்டாள்.

பதில் திருப்தி அளிக்கவில்லை.

“அடேயப்பா... எப்படி நெற்றுக்குத் தூங்குறாங்க”

“நாங்க எங்க மண்டபத்தில படுக்கிறது, வெளியில முற்றத்திலதானே படுக்கை” - என்று போகிற போக்கில் சொல்லிவிட்டு கூட்டத்தில் மறைந்தாள் ஒருத்தி. அவர்கள் திரும்பிப் போனார்கள்.

அடுத்த வாரம் சனிக்கிழமை, ஒரு கிறித்தவப் பாதிரியார் வந்து கிறித்தவப் பிள்ளைகளுக்கான பிரார்த்தனையை நடத்தினார். அடுத்த வெள்ளிக்கிழமை அப்பெரிய வளாகத்தில் வீதியோரமாக நின்ற வேப்ப மரத்தின்கீழ், ஒரு அம்மன் படத்தை வைத்து, பெரிய பொங்கல் நடந்தது. அனைத்து இந்துப் பெண்களும் கலந்து கொண்டனர்.

பூசைக்கென ஒரு ஐயர் வந்தார். இவர்தான் இராணுவத்தினரின் ஆஸ்தான ஐயர். செட்டிகுளம் நெளுக்குளம், பூந்தோட்டம் உட்பட அனைத்து புனர்வாழ்வு முகாங்களுக்கும் இவர்தான் ஒரே ஐயர்

ஆஜானுபாகுவான தோற்றமும், தோற்றத்துக்குச் சற்றும் பொருந்தாத அசட்டுச்சிரிப்பும், இவருக்குரியது. யாரைக்கண்டாலும் கூசாமல் சிரிப்பதால், இவருக்கு ‘வழிசல் ஐயா’ என்ற பட்டத்தை பெண்கள், எரிச்சலுடன் வழங்கி, தமது ஆற்றாமையை தீர்த்துக் கொண்டனர்.

இந்த பிரார்த்தனை, பூசை, பஜனை என்பவற்றில் ஈடுபடுவதாலும், தியானம் செய்பவளாக இருப்பதாலும் பார்வதியிடம் ஏனைய பெண்கள் தமது துயரங்களை - உள்ளக் கிடக்கைகளை - சொல்வதுண்டு. பார்வதியும் கேட்பதுடன் அவர்களுக்கான ஆலோசனைகளையும் சொல்வாள். என்றோ படித்திருந்த உளவியல் அவளுக்கு இப்போது உதவியது. அவள் எதிர்பாராமலேயே பலர் தமது சுமையான பல சம்பவங்களை அவளுடன் பகிர்ந்து கொண்டனர். பலர் அப்படி பேசியபின் தமது மன அழுத்தம் குறைவதாக அவளிடமே கூறியதுண்டு.

மதி, அவளிடம் வரும்போதே தன்னை யாரும் தொடர்கிறார்களா எனப் பார்த்துக் கொண்டே வந்தாள்.

“வணக்கம் மம்மீ”

“இருங்க” என்றாள் பார்வதி.

“மம்மீ...நான் மதி. உங்கட பேர்த்தி தமிழொளியோட நிண்டனான்”

“அப்பிடியா? எனக்கு உன்னைக் கண்ட ஞாபகம் இல்லையே”

“நான் உங்களக் கண்டிருக்கிறன். கடைசியா வெள்ளை முள்ளிவாய்க்காலுக்கு நீங்க எங்கட இடத்துக்கு வந்தபோது”

“அப்பிடியா? இப்ப உங்கள சிவில்ல பாக்கிறன். முதல் யூனிபோமில பாத்திருப்பன்” - என்று புன்னகைத்தாள் பார்வதி.

அவள் அமைதியாக நின்றாள். அவள் உட்காரும்வரை பார்வதி பொறுமையாக இருந்தாள். அவள் அங்குமிங்கும் பார்த்துவிட்டு உட்கார்ந்தாள். அவள் கண்களில் பீதி படர்ந்திருந்தது. இருபத்து மூன்று அல்லது இருபத்து நான்கு வயது இருக்கும். பொதுநிறம், சுருண்டமுடி, அழகிய தோற்றம். மதி பேசத் தொடங்கினாள். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலைஞர் பதிகம்










வாய்விட்டு சிரிங்க...ப்ளீஸ்... சிரிங்க ப்ளீஸ்

"வீடு கட்ட லோன் வாங்கின பணத்துல இரண்டாம் கல்யாணம் பண்ணிக்கிட்டியாமே நிஜமா?"

"இப்போதைக்கு சின்ன வீடு போதும்னு ஜோசியர் சொன்னார்.."







வாய்விட்டு சிரிங்க...ப்ளீஸ்...

"வாழ்க்கையின் மிகப் பெரிய சந்தர்ப்பம் எது?"

"மனைவியின் கன்னத்தில் கொசு உட்காருவது."

வாய்விட்டு சிரிங்க...ப்ளீஸ்... சிரிங்க ப்ளீஸ்

மனைவி:- எங்கிட்ட உங்களுக்கு புடிச்சது என்ன?
அழகான முகமா!!!
அன்பான மனமா!!!
பணிவான குணமா!!
கணவன் :- உன்னோட இந்த காமெடிதான்டி

Like Us - www.facebook.com/siringa.ph




டொக்டர் : உங்களுக்கு இருக்கிற வியாதி குணமாகணும்னா மீன், கோழி சாப்பிடறதை நிறுத்தியே ஆகணும்.

நோயாளி : எப்படி டொக்டர் அதுகள் சாப்பிடறதை நான் நிறுத்த முடியும்?

## கடி ஜோக்: எலியும் ராஜாவும்

ஒரு ஊரில் எலித்தொல்லை. அதைப் பார்த்த ராஜா,"ஒரு செத்த எலி கொண்டு வந்தால் பத்து ரூபாய் தரப்படும்,"என்று அறிவித்தார்.

மக்களும் நிறைய எலிகளைக் கொன்று பையில் போட்டு அரண்மனையில் கொடுத்துப் பணம் பெற்றுச்சென்றனர்.

அரண்மனை துர்நாற்றம் எடுக்க ஆரம்பித்தது.அரசன் உடனே செத்த எலியின் வாலைக் கொண்டு வந்தால் போதும் என்று அறிவித்தார்.

வாலைக் கொண்டு வந்து பரிசு வாங்கும் மக்களின் எண்ணக்கை நாளுக்கு நாள் கூடிக் கொண்டே இருந்தது.

ஆனால் எலித்தொல்லை குறையவில்லை.இது பற்றி அரசன் தீவிரமாக விசாரித்ததில்தெரிய வந்தது.

பணம் கிடைக்குமே என்றுமக்களே வீட்டில் எலி வளர்க்க ஆரம்பித்து விட்டார்கள்!

## காசை முழுங்கிட்டானே!

ஒரு பேருந்து நிலையத்தில் ஒரு பெண் தன்னுடையபையனுடன் பதற்றமாக நின்று கொண்டிருந்தாள்.பக்கத்தில் உள்ளவர்கள் என்னவென்று கேட்டனர்.

"இவன் காசை முழுங்கிட்டான்.என்ன செய்றதுன்னுதெரியலை"

ஆளாளுக்கு மருத்துவம் சொல்ல ஆரம்பித்தார்கள். ""நாலுவாழைப் பழத்தை ஊட்டிவிடு. தானா வெளியே வந்துடும்"

"ஆஸ்பத்திரிக்குப் போய் எக்ஸ்ரே எடுத்துப் பார்... "

கூட்டத்தில் நின்று கொண்டிருந்த ஒருவர் பையனைத்தூக்கிக்குனிய வைத்து முதுகில் தட்டிக் கொடுத்தார். பையன் விழுங்கிய காசுவெளியே வரவில்லை.

அப்போது டிப்டாப்பாக உடையணிந்த ஒருவர் வந்தார்.பையனைத்தூக்கி, தலைகீழாகப் பிடித்துக் குலுக்கி, ஒருதட்டுத் தட்டினார். காசு வெளியே வந்து விழுந்தது.

எல்லாரும் ஆச்சரியமாகப் பார்த்தார்கள். அந்தப் பெண்நன்றியுடன் அவரைப் பார்த்தாள்.

"சார் நீங்க டாக்டருங்களா?"

"இல்லை இன்கம் டக்ஸ் ஆபிஸர். எங்கே, எப்படித்தட்டினால் காசு விழும்னு எனக்குத் தெரியாதா?

IMMIGRATION LAW ACCREDITED SPECIALIST

PARISH PATIENCE IMMIGRATION LAWYERS FOUNDED 1888

MIA Migration Institute of Australia

Our large legal team provideds a full range of specialist immigration legal services no matter where you are in the world at competitive rates



Michael T. Jones
Legal Practice Manager
Accredited Specialist in Migration Law
MARN: 9255530
Email: MTJONES@ppilaw.com.au



Mahalingam (Shan) Sutharshan
LL.B (Col), LL.M (Monash), LL.M (ANU).
Director
MARN: 0961664
Email: SHAN@ppilaw.com.au



Prasad Pahalawela
Solicitor & Migration Agent
MARN: 12800846
Email: PRASADP@ppilaw.com.au



Ashwina Krishnan
Solicitor & Migration Agent
MARN: 1913008
Email: ASHWINAK@ppilaw.com.au

Non - Immigration Matters

- Family Law & Divorce Application
- Criminal Law
- Traffic Offences
- Commercial & Business Law

Our professional provide expert assisstance with:

- Business & Investment Visas SC188, 888, and 132
- Student SC500 and Student Dependent Visa
- SC485 (TR) and SC485 Dependent Visa
- General Skilled Migration (GSM) SC189, 190 and 489 Visa
- Skilled Assessment, SkillSelect, EOI
- State Sponsorship and Nomination
- ENS (SC186), RSMS (SC187) and TSS (SC482)
- Refugee & Asylum Seekers SC866
- Temporary Protection Visa SC785
- Safe Haven Enterprise Visa (SHEV) SC790
- Family, Partner, Child, Parent, and Carer Visa
- Visitor SC600 and Working Holiday Visa
- Distinguished Talent Visa
- Citizenship and Resident Return Visa
- Administrative Appeal Tribunal (AAT)
- Federal Circuit Court, Federal Court & High Court
- Visa Cancellation, Detention and Deportation
- Health, Character & Identity Issues (PIC4020)
- All other visas and Immigration matters
- Commercial and Property matters


Lawyers and Registered Migration Agents: T. Nguyen: Director & MARN: 0322836 | A. Dougall Lawyer & MARN: 1684660 | A Shah MARN: 1801710 | A Charif: MARN: 1803234

Parish Patience Immigration Lawyers | Level 3, 83 York Street Sydney NSW 2000 | Tel: +61 02 9286 8700 | E: PPMAIL@ppilaw.com.au | W: www.parishpatience.com.au

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசார குரு பெயர்ச்சி-2021

ஜோதிடத்தில் குரு பெயர்ச்சியைப் போல அதிசார குரு பெயர்ச்சி பெரியளவில் கவனிக்கப்படாமல் இருந்தது. ஆனால் இந்த முறை அதிசார குரு பெயர்ச்சி அதிகமாக கவனிக்கப்பட சில காரணங்கள் உள்ளன. எப்போதும் ஒரிரு மாதங்கள் அதிசாரமாக செல்லும் குரு, இந்த முறை கிட்டத்தட்ட 5 மாதங்களுக்கும் அதிகமாக மகரத்திலிருந்து கும்பத்தில் சஞ்சாரம் செய்ய உள்ளார்.



## மேடம்

மேட ராசியினர் இந்த அதிசார குரு பெயர்ச்சியால் பல்வேறு வகையில் அனுகூல பலனை அடையக்கூடியவர்களாக இருப்பீர்கள். அதே சமயம் குரு பகவானுக்கு 3ஆம் வீடாக மேஷ ராசி அமைவதால் எந்த ஒரு செயலையும் கவனமாக, சிந்தித்து செயல்படுவது மிகவும் அவசியம்.

உங்களின் கடின உழைப்பு மற்றும் கவனமான செயல்பாட்டால் உங்களின் மோசமான நிலை அப்படியே தலைகீழாகி நற்பலனைத் தரக்கூடியதாக இருக்கும். குடும்பத்திலும், பணியிடத்திலும் உங்கள் மீதான மதிப்பு மரியாதை அதிகரிக்கும். வெற்றிகள் அதிகரிக்கும். உத்தியோகத் தர்களுக்கு பணிச்சுமை ஏற்பட்டும், தொழிலில் சில தடுமாற்றங்கள் நிறைந்த தாக இருக்கும்.

குருவின் 9ஆம் பார்வை ராசிக்கு 7ஆம் இடத்தில் விழுவதால் சுப காரியங்கள் சிறப்பக நிறைவேறும்.

## இடபம்

குரு 9ஆம் இடமான பாக்கிய ஸ்தானத்திலிருந்து தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் உங்களுக்கு புதிய வேலை வாய்ப்பு கிடைக்கலாம்.

உத்தியோகஸ்தர்களுக்கு மன நிம்மதி தரக்கூடியதாக இந்த காலம் இருக்கும். அதோடு உத்தியோக உயர்வு, சம்பள உயர்வு ஏற்பட வாய்ப்புள்ளது.

தேவையற்ற விரய செலவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. இருப்பினும் உங்கள் ராசிக்கு திருமணம் உள்ளிட்ட சுப காரியங்கள் கைகூடும். சுப செலவுகள் அதிகமாக ஏற்பட வாய்ப்புள்ளது. புதிய தொழில் தொடங்க நினைப்பவர்கள் ஆலோசனைப் பெற்று தொடங்க லாம்.

## மிதுனம்

குரு பகவானின் 5ஆம் பார்வை மிதுன ராசி மீது விழுவதால் திடீர் முன்னேற்றம் அடையக்கூடிய அற்புத காலமாக இருக்கும். திருமணம், குழந்தை பாக்கியம், புதிய வேலை கிடைத்தல், உத்தியோக உயர்வு கிடைத்தல் போன்ற பல்வேறு புதிய நிலைக்கு கொண்டு செல்லக்கூடிய நிகழ்வுகள் நடக்கும்.

நிதி நிலை உயர்ந்து உங்கள் கடன் பிரச்சினைகள் தீரக்கூடியதாக இருக்கும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டாகும். சகோதரர்களுக்கும் உங்கள் மூலமாக நற்பலன்களைப் பெறுவீர்கள்.திருமண முயற்சிகளிலிருந்த தடைகள் நீங்கி சிறப்பாக நடக்கும்.

சுய தொழில் செய்வோர் உங்களின் திறமையைப் பயன்படுத்துவதும், புதிய திட்டங்களை அமல்படுத்துவதால் நீங்கள் நினைத்ததை விட முன்னேற்றத்தை அடையலாம்.

## கடகம்

கடக ராசிக்கு அஷ்டம ஸ்தானமான 8-ஆம் இடத்தில் வருவதால் அனைத்து விஷயத்திலும் சற்று கவனமாக செயல்படுவது அவசியம். உங்கள் கோபத்தை குறைத்துக் கொண்டு குணமாக நடந்து கொள்வதும். எந்த ஒரு செயலிலும் சோம்பேறித்தனத்தைத் தவிர்த்து வேகமாக செயல்படுவதால் எந்த ஒரு செயலிலும் வெற்றியை பெறலாம்.

பணியிடமாக இருந்தாலும், குடும்பமாக இருந்தாலும் உங்கள் பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது அவசியம். பண விஷயத்தில் கவனமாக இருப்பது அவசியம். தொழில் வியாபாரத்தில் பெரிய முதலீடுகளை செய்ய வேண்டாம். ஆரோக்கியத்தில் கவனமாக இருக்க வேண்டியது அவசியம். உணவு விஷயத்தில் அலட்சியம் வேண்டாம். இந்த காலத்தில் குலதெய்வ வழிபாடு செய்வது மிகவும் அவசியம். தேவையற்ற மன உளைச்சல், அவமானம் ஏற்படாமல் தடுக்கலாம்.

## சிம்மம்

குரு பகவானின் 7ஆம் பார்வை உங்கள் ராசி மீது விழுவதால் பல்வேறு சுப பலன்கள் ஏற்படும். 7ஆம் இடம் மனைவி, தொழில், கூட்டாளி ஸ்தானமான உங்கள் ராசியைப் பார்ப்பதால் கணவன் - மனைவி இடையேயான ஒற்றுமை மேம்படும்.

இதனால் நீண்ட நாட்களாக திருமணம் தள்ளிப்போகின்றவர்களுக்கும். திருமண முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு விரைவாக திருமணம் நடைபெறக்கூடிய அமைப்பு ஏற்படும்.

குழதை வரம் வேண்டுவோருக்கு அந்த வரம் கிடைக்கும். எடுத்த காரியத்தில் வெற்றி பெறலாம். ஆரோக்கியம் மேம்படும். உங்களின் செலவுகள் குறைந்து சேமிக்கும் மனப்பாங்கு ஏற்படும். எழுத்து சார்ந்த தொழில், கமிஷன் தொழில் உள்ளிட்டவை பிரகாசிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசார குரு பெயர்ச்சி-2021

## கன்னி

குரு மறைவு ஸ்தானமான 6ஆம் இடத்திற்குச் செல்கிறார். ஜோதிட விதிப்படி குரு 6இல் இருந்தால் பெரியளவு நன்மைகளை செய்ய மாட்டார். அதனால் கன்னி ராசிக்கு சற்று பிரச்னைகளைத் தரக்கூடிய காலமாக இருக்கும். புதிய தொழில், புதிய முதலீடு விஷயங்களில் ஈடுபடும் போது தேவையற்ற நஷ்டம், சட்ட சிக்கல், பொருளாதார தடை ஏற்பட வாய்ப்புள்ளது.

புதிய தொழில், வேலை தொடங்காமல், முதலீடு செய்யாமல் இருந்து, இருக்கும் வேலையை சரியாக செய்து வந்தாலே உங்களுக்கு பல்வேறு வகையில் அனுகூலமானதாக இருக்கும். மனம் போன்ற போக்கில் செயல்படுவது பெரிய பிரச்னைகளை கொண்டு வரும். சிந்தித்து, திட்டமிட்டு செயல்படுவது மிக அவசியம்.

## துலாம்

துலாம் ராசி மீது குருவின் அதிசார நிலையால் 9ஆம் பார்வை விழுகிறது. இதனால் துலாம் ராசிக்கு தொழில், வியாபாரத்தில் இருந்து வந்த மறைமுக எதிரிகள் நீங்குவர். உத்தியோகத்தில் இருப்பவர்கள் நீங்கள் நினைத்தது போல உங்களின் முன்னேற்றம் அமையும்.

ராசிக்கு புதிய வீடு, மனை போன்ற சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. உடல் ஆரோக்கியம் மேம்படும். பெண்களுக்கு இருந்த பிரச்னைகள் நீங்கி சுபம் ஏற்படும். உறவுகள் சிறக்கும், குடும்பத்தில் தடைப்பட்டிருந்த சுப காரியங்கள் நடக்கும்.

முடங்கிக் கிடந்த தொழில் வளர்ச்சிப் பாதையை அடையும். அதனால் பல வகையில் லாபங்கள் உண்டாக வாய்ப்புள்ளது.

## விருச்சிகம்

கடுமையாக உழைத்தும் உங்கள் வேலை, உத்தியோகத்தில் எந்த முன்னேற்றமும் இல்லை என புலம்புபவர்களுக்கு நல்ல முன்னேற்றத்தை நிச்சயம் அடைவீர்கள். உங்களின் உழைப்புக்கு நல்ல லாபமும், சம்பள உயர்வு கிடைக்கும்.

கடுமையான பணிச்சுமையில் அவதிப்படுபவர்கள் அதிலிருந்து விடுபடும் வண்ணம் சூழல் அமையும். உங்களுக்கு பதவி உயர்வு கிடைக்கலாம், உங்களுக்கான உதவு நபர் சேர்க்கப்படலாம். இது போன்ற பணிச்சுமை குறைந்து சுகத்தை அனுபவிப்பீர்கள்.

வெளியூரில் தங்கி வேலை செய்தல், இரண்டு வேலைகளை செய்து ஒரு வேலை மிக சிறப்பான யோகம் தரக்கூடியதாக இருக்கும்.

## தனுசு

பல வகையில் அதிர்ஷ்டத்தை தரக்கூடிய காலமாக இருப்பதால் இந்த காலத்தை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

திருமணம், புத்திர பாக்கியம் போன்ற சுப நிகழ்வுகள் நடக்கும். குருவின் அருள் கிடைக்கும். பிரிந்திருந்த கணவன் – மனைவி ஒன்று சேர்வதற்கான சிறப்பான காலமாக இருக்கும்.

உங்கள் தொழிலில் கூட்டாளிகள், பங்காளிகளின் ஒத்துழைப்பு சிறப்பாக இருக்கும். நண்பர்கள் ஆதரவு நன்றாக இருக்கும். எந்த ஒரு செயலும் கூட்டாக செய்ய முயன்றால் வெற்றி கிடைக்கும்.

உங்களின் வீடு, மனை கனவுகள் நிறைவேறும். சொத்து கிடைப்பதற்கும், வாங்குவதற்கும் வாய்ப்பு உள்ளது.

தொட்டதெல்லாம் வெற்றி பெறக்கூடிய அருமையான காலமாக இருக்கும்.

## மகரம்

தன வாக்கு ஸ்தானத்தில் குரு வருவதால், உங்கள் பேச்சை அனைவரும் கேட்பார்கள். குடும்பமாக இருந்தாலும், பணியிடமாக இருந்தாலும் உங்களின் பேச்சு எடுபடும். பேச்சு வைத்து தொழில் நடத்தும் ஆசிரியர், வழக்கறிஞர், பேச்சாளர் உள்ளிட்டவர்கள் யோகங்களை அனுபவிப்பவர்களாக இருப்பார்கள்.

திருமண பாக்கியம் உண்டாகும். தடைப்பட்டு வந்த திருமணம் அல்லது வரம் அமையாமல் இருந்த திருமண வயதில் உள்ளவர்களுக்கு விரைவில் திருமணம் யோகம் உண்டாகும்.

அதே சமயம் பல விஷயங்களில் கவனமாக நடந்து கொள்ள வேண்டியதாக இருக்கும். குறிப்பாக தேவையற்ற வாக்குறுதிகளைக் கொடுக்காமல் இருப்பது அவசியம். இதை செய்து முடிப்பேன், முடித்துத் தருவேன் என வாக்குறுதிகளைக் கொடுக்க வேண்டாம்.

## கும்பம்

ஏழரை சனி நடக்கிறதே எப்படி நற்பலன் கிடைக்கும் என புலம்பிக் கொண்டிருப்பவர்களுக்கு விடிவு காலமாக இருக்கும்.

கலைத்துறையில் இருக்கும் கும்ப ராசியினருக்கு பல வகையில் அதிர்ஷ்டம் தரக்கூடியதாக இருக்கும். சுய தொழில் அல்லது தொழிலில் பங்குதாரர் ஈடுபட்டிருந்தால் அதன் மூல உங்களுக்கு லாபகரமான பலனை அடையலாம். தொழில், வியாபார ரீதியான முன்னேற்றம் தரக்கூடியதாக இருக்கும்.

வெளியூர், வெளி மாநிலம், வெளி நாடு, பயணங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. தொழில் ரீதியாக பயணங்கள் அதிகரிக்கும்.

பட்டம், பதவி கிடைக்க வாய்ப்புள்ளது. அரசு வேலை செய்பவர்களுக்கு அனுகூல பலன்கள் கிடைக்கும். பதவி உயர்வு கிடைக்க வாய்ப்புள்ளது.

## மீனம்

மீன ராசி அதிபதி குரு, நீச பங்க ராஜ யோக நிலையிலிருந்து உங்கள் ராசிக்கு 12ஆம் இடத்திற்கு வர உள்ளார்.

இதனால் நிலையற்ற தன்மையை உணர்வீர்கள். எந்த ஒரு எளிய விஷயத்திற்கும் முடிவெடுப்பதில் தடுமாற்றம் அதிகமாக இருக்கும்.

உங்களுக்கு பல்வேறு வகையில் விரயங்களைத் தரக்கூடியதாக இருக்கும். இருப்பினும் அந்த விரய செலவை சுப செலவாக்க முயலவும்.

உடல் ஆரோக்கியம் சிறக்கும். குரு உங்களுக்கு தொழில் ரீதியாக முன்னேற்றத்தை அளிக்கக்கூடியவராக இருப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org